14ஆவது வருடத்தில்....

# விளம்பரம் VLAMBARAM™


416-282-8059 416-282-4978

சமூக முன்னேற்றப் பத்திரிகை மாதமிருமுறை இலவசம்



வெளிவந்துவிட்டது

உலகத் தமிழோசை

7வது இதழ்

சிறப்பு விலை


$1.50 மட்டுமே



**வீடு விற்க, வாங்க...**

Raja M. Mahendran, P. Eng.

(Broker / Owner)



HomeLife GTA Realty Inc.

1711 McCowan Rd. Suite #206, Toronto

Direct: 416.315.9397

OFFICE: 416.321.6969

Sales Agents Welcome




நதி 14 April 15, 2004 பாலம் 08


## இலங்கை புதிய பிரதமர்

மகிந்த ராஜபக்ஷ (Mahinda Rajabaskse)






## கிரிக்கெட் தகவல்கள்



Brain Lara

மேற்கிந்திய தீவுகள் சென் ஜோன்ஸில் நடைபெற்றுவரும் இங்கிலாந்துக்கு எதிரான 4வது டெஸ் போட்டியில் அதிக ஓட்டங்களை குவித்து உலக சாதனை படைத்தார் மேற்கிந்தியத் தீவுகள் அணித் தலைவர் பிரையன் லாரா (34). April 12ஆம் திகதி நடைபெற்ற 3ஆம் நாள் ஆட்டத்தில், பந்தை பவுண்டரிக்கு விளாசி 384 ஓட்டங்களைச் சேர்த்து புதிய சாதனை படைத்தார் அவர்.

அவுஸ்திரேலிய வீரர் மாத்யூ ஹேடன் 380 ஓட்டங்களைச் சேர்ந்திருந்ததே இதுவரையிலான சாதனையாக இருந்தது.

2 ஆம் நாள் ஆட்ட முடிவில் 313 ஓட்டங்களைக் குவித்து ஆட்டமிழக்காமல் இருந்தார் லாரா. புதிய சாதனை படைத்ததும் விண்ணை நோக்கி கையைக் குத்தி ஆர்ப்பரித்தார் லாரா. களத்தில் இருந்த இங்கிலாந்து வீரர்கள் அனைவரும் அவரை சூழ்ந்து வாழ்த்து தெரிவித்தனர். 'சாதனையை என்னால் நம்பமுடியவில்லை. இந்த நிகழ்வு எனக்கு புத்துணர்வை அளித்துள்ளது. உண்மையிலேயே மிகவும் களைப்பாக உள்ளேன். ஆனால் அது மிகப் பெரிய விஷயம் என லாரா தெரிவித்தார். ஹேடன் வாழ்த்து: சாதனையை முறியடித்த லாராவுக்கு ஹேடன் வாழ்த்து தெரிவித்துள்ளார். 400 நொட் அவுட்: திங்கள் கிழமை நடைபெற்ற 3ஆம் நாள் ஆட்டத்தில் உணவு இடைவேளைக்குச் சற்று பின்னர் 400


தொடர்ச்சி 6ஆம் பக்கம்



**துரித பணமாற்றுச் சேவை**

வவுனியா -கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கும் கடுகதியில் பணம் அனுப்புவதற்கு

**மு. காசிப்பிள்ளை & சன்ஸ்**

416.267.8221



**Singapore Communication**

Since 1991

FAMILY PLAN $60.00/ M/ 2PHONES

- 300 mins Daytime to share
- Evenings & weekend free
- Between the members Unlimited
- Buy one phone as low as 24.99 & 2nd Free*

$40.00/ Month

350 Mins Daytime Free

Evenings & Weekends Free

V/ M, C/ C & C,W Free Come in store for more INFO

* Offer Ends Without Notice*


Buy One Accessory or Get one ½ price

More Info. Call: 416-740-5292

5010 Steeles Ave. W.,Unit 17ABC-(Kipling & Steeles)



**சந்திரமௌலீஸ்வர சிவாலயம்**



வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை திறந்திருக்கும். தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்.

ஆலயம் திறந்திருக்கும் நேரங்கள்

திங்கள் - வியாழன்
காலை 7am - 2pm,
மாலை 5pm - 9pm

விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்

Tel: 416 - 754 - 7338 / 416 -724 -7480

3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarboro.



**Insurance & Financial Services**



Balan Kanapathi (Agent)

- Auto
- Home
- R.R.S.P
- Life
- Disability
- Mutual Fund
- Group Insurance
- Child Education
- Travel & Business

416.321.1515 • 905.294.2429

4433 Sheppard Ave. E. Suite 200, (Brimley/ Sheppard)



வாய், பல் சம்பந்தமான வைத்திய சேவைகளுக்கு

WALK IN DENTAL CLINIC

9.00A.M - 9.00P.M

Dr. Iru Vijayanathan

குடும்ப பல்வைத்தியர்

416-264-3232

3150 Eglinton Ave. E.

Markham & Eglinton சந்திப்புக்கு அருகாமையில்


## அருள் விருந்து

- கொடையாளியாயிரு. கடன்பட்டவனாயிராதே. கொடை ஒன்றே மனிதனை மேன்மைப்படுத்துகிறது.
- நீரை இறைக்க இறைக்க அதுமேலும் கிணற்றில் ஊறுகிறது. சுயநலம் கருதாத சேவையானது அங்கணம் ஆற்றலை வளர்க்கிறது.
- நல்லவைகளை ஆதரி, அழுகியவைகளைப் போன்று அவை யாவும் கடவுளிடத்திருந்து தோன்றியவை.
- நமக்கு சுகத்தைத் தருவது எதுவோ, அதனிடத்து துக்கத்தைத் தரும் வல்லமையையும் மறைந்திருக்கிறது.
- துன்பத்துக்கு ஏதுவான இவ்வுலக வாழ்க்கையைத் துன்பமற்றதாக யோகி செய்து கொள்கிறான்.


**வீடு வாங்க, விற்க...**

ரவி பரமு

வீட்டுப் பிரதிநிதி



DIRECT: 416.262.4176

OFFICE: 416.321.6969

HomeLife GTA Realty Inc.

1711 McCowan Rd. Suite #206, Toronto





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# செய்யும் தொழிலில், வெற்றி பெற

## ஏமாற்றாதே, ஏமாறாதே

செய்யும் தொழிலில் வெற்றி பெற, பெறுவதற்கு கடினமானது; இழப்பதற்கு எளிதானது எவை தெரியுமா?
* நம்பிக்கை (நாணயம்)
* தொடர்புகள் (உறவுகள்)

**பெரி. முத்துராமன்**

மற்றவர்கள் உங்கள் மேல் வைக்கும் நம்பிக்கைக்கும் உங்களுக்கு கிடைக்கும் தொடர்புகளுக்கும் அடிப்படை உங்கள் தன்னம்பிக்கையும், நேர்மையுமே ஆகும். உங்கள் தன்னம்பிக்கைக்கு அடிப்படையான காரணிகள் என்ன தெரியுமா?

* அறிவு - உங்கள் தொழிலைப் பற்றிய அறிவு. நீங்கள் விற்கும் பொருள் அல்லது சேவையைப் பற்றிய அறிவு. நுட்பமான அறிவு. மேலெழுந்த வாரியான அறிவு அல்ல.
* ஆற்றல் - உங்கள் தொழில் அல்லது சேவையால் மற்றவர்களுக்குக் கிடைக்கக் கூடிய பயன் என்ன? அந்தப் பயனை உங்களால் எந்த அளவுக்கு மற்றவர்களுக்கு விளங்கச் செய்ய முடியும்? 30 விநாடிகளில் நீங்கள் செய்யும் தொழில் என்ன? அதனால் கேட்பவர்களுக்கு என்ன பயன் என்று உங்களால் விளங்க வைக்க முடியுமா?
* அனுபவம் - குறிப்பாக மற்றவர்களுடன் பழகும் (நடந்து கொள்ளும்) முறையில் உங்கள் அனுபவம் என்ன? மற்றவர்களுடன் எவ்வளவு விரைவில் உங்களால் இணைந்து பேச, பழக கவர முடியும்?

உங்கள் தொழில் அல்லது சேவையை அதிகரிக்க நீங்கள் முன்பே குறிப்பிட்டபடி மற்றவர்களுக்கு உங்கள் மேல் இருக்கும் நம்பிக்கையை வளர்க்க வேண்டும்.
* ஏற்கனவே இருக்கும் வாடிக்கையாளர்களுக்கு உங்கள் மேல் நம்பிக்கை நிலைக்குமாறு நீங்கள் நடந்து கொள்ளவேண்டும்.
* புதிதாக வரும் வாடிக்கையாளர்கள் உங்கள் மேல் நம்பிக்கை கொண்டு திரும்பத் திரும்ப வருமாறு நீங்கள் நடந்து கொள்ளவேண்டும்.
* உங்கள் புதிய, பழைய வாடிக்கையாளர்களைத் திருப்தி செய்வதன் மூலம், அவர்கள் மூலமாக மேலும் புதுத் தொடர்புகளை (Referral) உருவாக்கிக் கொள்ளவேண்டும். அந்தத் தொடர்புகளிலும் நம்பிக்கைக் குறைவான எதையும் செய்யக் கூடாது.

ஒன்ராரியோ நிதி சேவைக்குழு (FSCO) ஒன்ராரியோ மாநிலத்தில் சமீபத்தில் நடந்த ஒரு ஏமாற்றுதலைப் பற்றி மக்களை எச்சரித்துள்ளது. நடந்தது இதுதான். "பொதுமக்கள் இணைய தளத்தின் மூலமாக கடன் கேட்டு விண்ணப்பிக்கத் தூண்டப்படுகிறார்கள். அவ்வாறு விண்ணப்பிப்பவர்களுக்குக் கடன் அனுமதிக்கப்பட்டுவிட்டது. அதை வழங்குவதற்கு முன் நிபந்தனையாக காப்புறுதி (இன்சூரன்ஸ்) பத்திரம் ஒன்றை வாங்க வேண்டும் என்று கூறப்படும். கடன் கிடைக்கப்போகின்ற சந்தோஷத்தில், கடனுக்கு விண்ணப்பித்தவர் மகிழ்ச்சியுடன் பிரிமீயத்தை அந்த நிறுவனம் கேட்டபடி செலுத்தி விடுவார். அதற்குப் பிறகு அந்த நிறுவனம் கடன் விண்ணப்பித்தவருடன் எந்தக் தொடர்பையுமே கொள்ளாது கடன் விண்ணப்பித்தவர், பிரிமீயத்தை செலுத்திய பின், கடனைப் பற்றி கேட்கும் எந்தக் கேள்விக்கும் மறுமொழியே இராது." இவ்வாறு ஒன்ராரியோ மாநிலத்தில் பணத்தை இழந்தவர் பலராம்.

இணைய தளத்தின் மூலம் நடத்தப்படும் ஏமாற்றுதல்களில், குற்றவாளியைக் கண்டு பிடிப்பது சற்றே சிரமம். பல



சமயங்களில், குற்றவாளி பல மைல் தொலைவில் பாதுகாப்பான வேறு ஒரு நாட்டில் கூட இருக்க முடியும். நீங்கள் வாடிக்கையாளர் அல்லது நுகர்வோராயிருக்கும் சந்தர்ப்பங்களில் ஏமாறாமல் இருக்க சில குறிப்புகள்:

* உங்கள் அறிவு, ஒன்றை ஏமாற்றுதலாய் இருக்குமோ என்று எச்சரித்தால், அந்தக் காரியத்தைத் தொடராதீர்கள்.
* பொது அறிவுக்கு ஏற்காத எதுவுமே ஏமாற்றுதலாக இருக்க வாய்ப்பு உண்டு. அத்தகைய சந்தர்ப்பங்களில் அரசின் நிர்வாக இயந்திரங்களுடனோ, விபரமறிந்த மற்றவர்களுடனோ தொடர்பு கொண்டு உங்கள் சந்தேகங்களை நிவர்த்தி செய்து கொள்ளுங்கள்.





கீழ்க் காணும் வார்த்தைகளை தொலைபேசியில் கேட்டாலோ அல்லது விளம்பரங்களில் பார்த்தாலோ முன்னெச்சரிக்கையாக நடந்து கொண்டு, தொலைவைக் கடைப்பிடித்தல் ஏமாற்றத்தைத் தவிர்க்கும்.
* நீங்கள் இன்றே, இப்போதே வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இல்லையேல் இந்த வாய்ப்பு இல்லாமல் போய்விடும்.
* நீங்கள் ஒரு 'இலவச' பரிசு அல்லது பயணத்தைப் பெற்றிருக்கிறீர்கள். அதைப் பெற தபால் மற்றும் கையாளும் செலவுகளுக்காகப் பணம் அனுப்புங்கள்.
* வாய்ப்பு என்னவென்று புரிந்து கொள்ளுமுன்பே உங்களை வங்கி காசோலை அல்லது கிறடிக்காட் எண்ணை அனுப்பச் சொல்லி கேட்குதல்.
* இந்த நிறுவனம் மிகப் பிரபல்யமானது; இதைப் பற்றி நீங்கள் யாரிடமும் விசாரித்த தேவையில்லை. (இப்படி யாராவது சொன்னால் நீங்கள் பலமுறை பலரிடம் கேட்டு உங்களைத் திருப்தி செய்து கொள்ள வேண்டும்)
* அதிக இலாபமான வாய்ப்பு அல்லது ஆபத்துக்கள் அற்ற இந்த வாய்ப்பை நழுவ விடாதீர்கள். இப்படி யாராவது சொன்னால் அங்குதான் ஆபத்துக்கள் அதிகம் என்று புரிந்து கொள்ள வேண்டும்.

பொன்முட்டை இடும் வாத்தை அறுத்துப் பார்க்கும் தொழில் மேதைகள், முடிவில் ஏமாற்றத்தையே சந்திப்பார்கள் என்பது சரித்திரம் தரும் பாடமாகும். ஏமாற்றுவதன் மூலம் கிடைக்கும் வெற்றி நிரந்தரமானதுமல்ல; நிம்மதியானதுமல்ல. வியாபாரியோ, வாடிக்கையாளரோ, யாராயினும் பேராசை முடிவில் பெருத்த நட்டத்தையே தரும்.


**நாளையை இன்றே தொடுவோம்**




* உங்கள் ஓய்வூதியத்தைப் பாதுகாக்க விரும்புகிறீர்களா?
* உங்களுக்கு பெரிய வருத்தங்கள் வருமானால் RRSP யிலிருந்து தான் வருமானத்தைப் பெற வேண்டுமா?
* பெரிய வருத்தங்கள் வருவதனாலேயே 48 சதவீட்டுக் கடன்கள் கட்ட முடியாமல் போயிருக்கின்றன என்பது உங்களுக்குத் தெரியுமா? (மரணத்தினால் 2 சத வீதக் கடன்களே கட்ட முடியாமல் போயிருப்பதாக புள்ளி விபரம் கூறுகின்றது)



உங்கள் கவலை எதுவானாலும் இலவச ஆலோசனை பெற அழையுங்கள்:
**பெரி. முத்துராமன்**, MBA, M.COM., PFPC
Financial Planner & Consultant
416-430-0623 / Cell: 416-278-2026



**HOME INSPECTION**





> வீடு தரமானது என உறுதிப்படுத்திக் கொள்ள...
> வீடு பராமரிப்பு பற்றி விளக்கமாகத் தெரிந்து கொள்ள...

நம்பிக்கையான, நவீன, நிபுணத்துவ சேவைக்கு
**ந. தயாபரன்**
Certified Inspection Specialist

> NEW & RE-SALE HOME INSPECTIONS
> PROBLEM ANALYSIS & SOLUTIONS

**Expert Building Inspections LTD.**

• Exceed the Standards • Industry Canada Registered
• Professionals Serving the GTA • On site Report

24 / 7 - Toll Free - **1 866 373 3315**
**416.727.8336**



**ONTARIO FLOORING CO.**

Free Estimate

• All types of Hardwood Floors Installed
• Old Floors Refinished
• All Workmanship Guaranteed

Over 30 years experience

Raja - 416-540-8626 Varathan - 416-267-5270





**திருமண சேவை**

உங்கள் விருப்பத்திற்கேற்ப மணமகன் மணமகளைத் தெரிவு செய்ய சாதகக் குறிப்புடன் தொடர்பு கொள்ளுங்கள் எமது சேவையின் பலனைப் பெற்ற தம்பதிகள் பலர்/ எம்மவர்களின் தேவையே எமது சேவை.

அழையுங்கள்: **416-261-6219**

Weekly After 6:00PM / Weekends Anytime







**S M I L E**

• BUSINESS PLANS
• ACCOUNTING, TAXATION
• SYSTEMS - POINT OF SALES
• CORPORATE TAX PREPARATION OF FILING
• PROFESSIONAL OVER 15 YEARS EXPERIENCE

**RK CONSULTANTS**

PL. CALL: 905-887-7457 / 905-751-7537
24 hrs, 365 days




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# APPLEMORE AUTOMOTIVE

**உட்புற, வெளிப்பு திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்**


ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

* Detailing
* Motor Shampoo
* Interior Shampoo
* Exterior Wash
* Waxing

* Repairs
* Safety Certification
* Overall Maintenance
* Under Coating
* Rust Proofing

**416-285-4998**
**435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6**

**SPECIAL**




## பழைய வாகனம் வாங்கும் போது



வாகனங்களின் Insurance ஒரு பெரும் தலையிடியாக இருக்கின்ற காரணத்தினால் ஏராளமான மக்கள் பழைய வாகனங்களை நாடுகின்றனர். இப்படி பழைய வாகனங்களை வாங்க முற்பட்டு அதில் ஏமாற்றம் அடைந்தவர்கள் 50% எனலாம். முதலில் பழைய வாகனங்களை வாங்க முன்னர் உங்களின் தேவை என்ன, எப்படிப்பட்ட வாகனம் உங்களுக்கு விருப்பமானது, எப்படிப்பட்ட வாகனம் நீண்ட காலத்திற்கு பாவிக்கக்கூடியதும் அதேவேளை குறைந்த பாரமரிப்பு செலவும் உள்ளது என்பன முக்கியமானவை. Honda, Toyota போன்ற வாகனங்கள் கனடியர்களின் மத்தியில் மட்டுமல்ல தமிழர்களின் மனதிலும் இதுவரையில் இடம்பிடித்துள்ளன.

அதே வேளை BMW, VW போன்ற வாகனங்கள் பராமரிப்பு செலவு மிகக்கூடியதும் உதிரிப்பாகங்களின் விலை மிகக்கூடியதும் ஆகும். தற்போது பழைய வாகனங்களை வாங்குவது சம்பந்தமாக எடுத்துக்கொண்டால், எங்கு வாங்குவது என்பது முக்கியமான ஒரு விடயமாக உள்ளது. Honda அல்லது Toyota Dealer இல் போய் பழைய வாகனங்களை வாங்கும் போது நீங்கள் தனியார் Dealer இடம் வாங்குவதை விட ஒரு சிறிய தொகையை கூடுதலாக செலுத்தத்தான் போகிறீர்கள். இருப்பினும் உங்கள் வாகனத்துக்கு முழு உத்தரவாதம் கிடைக்கின்றது. பழைய வாகனங்கள் வாங்குவது சம்பந்தமாக ஏற்கனவே விபரங்கள் தந்திருந்தேன்.

*மேலதிக விபரங்களுக்கு: சோதீஸ்*
*Action Honda - 416-704-1179*


Special

# Rogers Cable

Installation Offer

எப்பவும் இல்லாத விஷேட சலுகை இந்த மாதம் மட்டுமே முந்திடுவீர்!!

No Connection Fee. No Contract

**Rogers**
**Hi Speed Internet**
2 Months Free
Save upto **$110**

TV - **Cable Service**
1 st month free
3rd Month $15 Rebate
Save up to **$120**

கனடாவின் முன்னணி நிகழ்ச்சிகளை வழங்கும் **Tamil Vision (TVI)** **பார்க்க ஆர்வமா?** அழைத்த அதே நாளில் உங்கள் இல்லம் வந்து இலவச இணைப்பை ஏற்படுத்தி தருகிறோம்.
Computer Truble Shoot Specialist தமிழில் தொடர்புகளுக்கு எந்நேரமும்
அழையுங்கள் **Sanjay - 416-315-2917**


## நூல் வெளியீட்டு விழா

*திரு. கந்தசாமி முத்துராஜா அவர்களின்,*

*"ஆழியவளை - யாழ்ப்பாணத்துக் கடலோரக் கிராமம் ஒன்றின் மரபும் மாற்றமும்"*

*என்னும் ஆய்வு நூலின் வெளியீட்டு விழா எதிர்வரும் ஏப்ரல் மாதம் சனிக்கிழமை 17, 2004 (17.04.2004) அன்று மாலை 6:00 மணிக்கு, ஸ்காபரோ சிவிக் சென்ரர் கேட்போர் கூடத்தில் நடைபெற உள்ளது. அனைத்து தமிழ் விழாவைச் சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.*

*ஒல்கார் அமைப்பினர்*
*நடைபெறும் இடம் : Scarborough Civic Centre (Council Chamber)*
*150 Borough Drive, Scarborough, ON.*

*தகவல்களுக்கு: 416-783-4809 416-602-2456*

## ஸ்ரீ இராமகிருஷ்ண சேவாச்சிரமம் - கனடா

கனடா ஸ்ரீ இராமகிருஷ்ண சேவாச்சிரமத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் மார்ச் 20ஆம் திகதி சனிக்கிழமை காலை 120 எமிற் (Emmett) வீதியில் உள்ள ஸ்ரீ இராமகிருஷ்ண மிசன் மண்டபத்தில் நடைபெற்றது. பிரார்தனை, பூசை, பஜனை, சிறுவர் நிகழ்ச்சி என்பவற்றைத் தொடர்ந்து நண்பகல் 12:00 மணியளவில் அறங்காவலர் வேலுப்பிள்ளை கணேஸ்வரனின் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்ற போது பின்வருவோர் புது வருட நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டனர்.

- ஸ்ரீ இராமகிருஷ்ண சேவாச்சிரமம் - கனடா

போசகர் - சுவாமி கிருபாமயானந்த மகாராஜி
அறங்காவலர் - வேலுப்பிள்ளை கணேஸ்வரன்
தலைவர் - நடராசா ஜெகநாதன்
உபதலைவர்கள் - சரஸ்வதிதேவி கணேஸ்வரன், வைத்திலிங்கம் ஆறுமுகராசா
செயலாளர் - துரைஐயா ஸ்ரீகிருஷ்ணராசா
பொருளாளர் - சுகிர்தரட்ணம் ஞானஸ்கந்தன்

**நிர்வாக உறுப்பினர்கள்**

1. சிவா சிவராமலிங்கம்
2. K.C. நடராசா
3. கதிரவேலு சிற்றம்பலம்
4. ரஞ்சி குகதாசன்
5. கமலாதேவி இராமசூரியன்
6. ரஞ்சனி வைகுந்தநாதன்
7. தனலட்சுமி இராஜதுரை
8. கார்த்தியாயினி பாஸ்கரன்
9. சின்னத்துரை நித்தியானந்தம்
10. தர்சன் ஸ்ரீகிருஷ்ணராசா

# பிரிவு கூறல்



அளவெட்டியைச் சேர்ந்த திருமதி பத்மாசினி உருத்திரமூர்த்தி அவர்கள் கடந்த 13.04.2004 அன்று கொழும்பில் காலமானார். அன்னார் காலம் சென்ற பிரபல ஈழத்துக் கவிஞர் மஹாகவியின் (துரைசாமி உருத்திரமூர்த்தி - அரசகரும மொழித்திணைக்கள ஆணையாளர்) மனைவியும் அளவெட்டி தமிழ்ப்பண்டிதர் முத்தையா, வேதநாயகி ஆகியோரின் மகளும், பாண்டியன், சேரன், சோழன், இனியாள், அவ்வை ஆகியோரின் அன்புத் தயாரும் ஆவார்.

**திருமதி**
**பத்மாசினி**
**உருத்திரமூர்த்தி**

**31.12.1935 - 13.04.2004**

**தொடர்புகளுக்கு:**
**எஸ்.கே.விக்னேஸ்வரன்**
**011 94 112943268**
**011 94 777 843 959**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## பகுத்தறிவு




மனிதனை மிருகங்களில் இருந்து வேறுபடுத்துவதே பகுத்தறிவு என்று சொல்லப்படும் ஆறாவது அறிவு ஆகும். ஆனால் அந்த பகுத்தறிவு இருந்தும் மனிதர்கள் நடத்தையில் மிருகங்களில் இருந்து வேறுபடுகின்றார்களா என்றால் உண்மையில் இல்லை என்றே கொள்ளவேண்டும். மனிதம், நாகரிகம், பண்பாடு, விடுதலை என்பனவெல்லாம் மனிதனுக்கு பகுத்தறிவு கொடுத்த பரிசுகள் என்று எண்ணினாலும், 21 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்து கொண்டு இருக்கும் மனித இனம் கற்கால மனித வாழ்க்கையில் இருந்து முன்னேறி இருக்கின்றதா என்றால் பதிலும் இல்லை என்பதே ஆகும்.



பகுத்தறிவை பாவித்து, பல வழிகளிலும் சிந்தித்து மனித மேம்பாட்டுக்கு மனிதன் பாடுபடுகின்றானா என்றால், அப்படி எண்ணுவதே தவறு எனும் வகையிலேயே மனிதனின் நடத்தைகள் இருக்கின்றன. பனை மரத்தின் கீழ் இருந்து ஒருவன் பருகுவது பாலா அல்லது கள்ளா என்று யாராவது அறிந்து கொள்ள முயலுகின்றார்களா என்றால், இல்லை. பால் என்று சொல்லி ஒரு கூட்டம் தொடங்கும். இல்லை கள் என்று சொல்லி ஒரு கூட்டம் மறுக்கும். இறுதியில் இரண்டு கூட்டமும் ஒன்றை ஒன்று அடித்துக் கொண்டு ஒரு கூட்டத்தை மற்றைய கூட்டம் கொன்றழிக்கும். முடிவில் பார்த்தால் பனை மரத்தின் கீழ் இருந்து அவன் குடித்தது மோராக இருக்கும். ஒரு விடயத்தை தமது தேவைகளுக்கு ஏற்ற வகையில் ஆதாயம் அடையும் நோக்கத்துடனேயே மனிதன் பகுத்தறிவை பெருமளவில் பாவிக்கின்றான் என்பது போலவே உலகின் நிலைமைகள் இருக்கின்றன.




ஈழத்தமிழ் பிரச்சினை சிங்களவர்களால் உருவான பிரச்சினையா? இல்லை. அது தமிழனால் தமிழனுக்கு உருவான பிரச்சினைகள் என்பதற்கு ஆதரமாக அண்மையில் நடந்த தேர்தலில், தமிழ் அரசியல் வாதிகளின் போக்குகளும் கருணா கிளப்பிய பிரதேசவாதமும் மீண்டும் நிரூபித்து இருக்கின்றன. சதாம் குசெய்ன் ஒரு அராஜகனாக ஈராக் மக்களை ஆண்டான். அவனை வெளியேற்றி ஈராக் மக்களுக்கு விடுதலை வாங்கி கொடுத்தோம் என்று அமெரிக்கா சொன்னாலும், காட்டு மிராண்டிதனமாக, இறந்த அமெரிக்க தொழிலாளிகளின் உடல்களையே கேவலப்படுத்தும் ஈராக் மக்களுக்கு சரியான ஆட்சி சதாம் குசெய்ன் செய்த அராஜக ஆட்சிதான் என்பதையும் நிரூபிக்கும் வகையில் அவர்களின் நடத்தைகளும், சுனி, சியாட் இன மக்கள் ஒருவரை ஒருவர் கொன்று குவிப்பதும் உறுதிப்படுத்தப்படுகின்றது. ஒரு நாட்டில் வாழ்ந்து கொண்டு, ஒரு மொழியை பேசி, ஒரே தெய்வத்தை தொழுது கொண்டு ஒருவரை ஒருவர் கொன்று குவிப்பதுவும், ஒற்றுமையின்றி வாழ்ந்து கொண்டு தமது பிரச்சினைகளை தாமே தீர்க்க முயலாமல் மற்றைய இனங்கள் மீதும், மற்றைய நாடுகள் மீதும் பழியை போடுவதும் பகுத்தறிவு கொண்ட மனிதர்களே என்பது தான் உண்மை. அதனால் மனிதனை பகுத்தறிவுப் பிராணி என்று அழைப்பதே பொருந்தும்.



ஈழத்தமிழ் மக்கள் சிங்கள காடையர்களால் அழிக்கப்பட்டால் என்ன? மனித உரிமைகள் மறுக்கப்பட்டு ஓர் இனத்தை மற்றைய இனம் அடக்கி ஒடுக்கினால் என்ன? சதாம் குசெய்ன், ஹிட்லர், பிடல்காஸ்ரோ போன்றவர்கள் தனிப்பட்ட முறையிலும், சோவியத்ரஷ்யா சீனா, வடகொரியா போன்ற நாடுகள் இரும்புக்கரம் கொண்டு மனித இனத்தை அடக்கி ஆண்டால் என்ன என்று பெரும்பான்மை ஜனநாயகநாடுகள் கண்டும் காணாமல் தாமுண்டு தம் வேலையுண்டு என்று இருப்பதுவும், மற்றைய நாட்டு பிரச்சினைகள் உள்நாட்டு பிரச்சினை, அதில் நாம் தலையிட முடியாது என்று ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் போன்ற அமைப்புக்கள் அக்கறையின்றி இருப்பதன் காரணங்களும் தெளிவாக தெரிகின்றன. உதவிசெய்யக் கூடாது என்பதல்ல காரணம். உபத்திரவத்தைத் தேடுவதுடன் பிரச்சினைகளுக்கான காரணங்களிற்கான பழியும் தம்மீது விழுந்துவிடக் கூடாது என்பதற்கே ஆகும்.

அமெரிக்காவே ஈராக்கை விட்டு வெளியேறு என்று கோசம் செய்பவர்களின் கருத்து சுனி, சியாட் இன மக்கள் ஒருவரை ஒருவர் அழித்து பிரச்சினைகளைத் தாமே தீர்த்துக்கொள்ளட்டும் என்பதற்காகவும் இருக்கலாம். நோர்வே நாட்டின் பிரதிநிதி எரிக்சொல்கேமை நம்மாட்டுப் பிரச்சினையில் தலையிடாதே என்று சிங்கள உறுமய கட்சியினர் கோசம் போடுவதன் நோக்கம் தமிழர்களே தமிழர்களை அழித்து நாட்டுப் பிரச்சினையைத் தீர்த்துகொள்வார்கள் என்று அவர்கள் நம்புவதாகவும் இருக்கலாம்.



அப்படிப் பார்க்கும் போது எஸ். டபிள்யூ ஆர். டி. பண்டாரநாயக்கா, ஜே. ஆர். ஜெயவர்த்தனா, பிரேமதாசா, சதாம் குசெய்ன், ஹிட்லர், முசோலினி, பிடல்காஸ்ரோ போன்ற தலைவர்களே பகுத்தறிவாளர்களை சரியான முறையில் ஆட்சி செய்ய தகுதிபெற்றவர்கள் ஆகின்றனர்.

பரம் ஜி.
ஒரு சாதாரணமனிதன்




**LARGE INDOOR PUBLIC CAR AUCTION**

*EVERY WEDNESDAY EVENING*
*STARTING AT 7:00 PM - VIEWING FROM 9:00 AM*

100+ VEHICLES ON DISPLAY INDOORS

INCLUDE MANY LATE MODEL

> G.M. > FORD
> CHRYSLER > HONDA
> NISSAN > TOYOTA
> V.W., & OTHER FOREIGN
& DOMESTIC VEHICLES



BANK REPOSSESSIONS, BAILIFF SEIZURES, BANKRUPTCIES, OFF LEASE VEHICLES, CONSIGNMENTS ETC.

**WEEKLY CASH BUYERS DRAWS OPEN**
**MONDAY - FRIDAY 9:00 AM TO 6:00PM**
**FOR VIEWING: SATURDAY 10:00 AM TO 4:00 PM**

*1032 MARTIN GROVE ROAD, ETOBICOKE, ON.*

**CIA PUBLIC AUTO AUCTION & SALES**
**416 - 242 - 5052**
www.cialeasing.com






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## உலக சாதனையை முறியடித்த லாரா!

# விளையாட்டுத் தகவல்கள் - 143

## கிரிக்கெட் தகவல்கள்

*1ஆம் பக்கத்தொடர்ச்சி*



*ஓட்டங்களைச் சேர்த்து ஆட்டமிழக்காமல் இருந்தார் லாரா. அத்துடன் மேற்கிந்திய தீவுகள் ஆட்டத்தை டிக்ளேர் செய்தது. அப்போது 5 விக்கெட் இழப்புக்கு 751 ஓட்டங்களைச் சேர்த்திருந்தது.*

*போட்டி நடைபெற்றுவரும் செயினற் ஜோன்ஸ் ஆன்டிகுவா ரிக்ரியேஷன் கிளப் மைதானத்தில் 10 ஆண்டுகளுக்கு முன்பு, இதே இங்கிலாந்து அணிக்கு எதிராக 375 ஓட்டங்களைக் குவித்து 'அதிக ஓட்டங்களைச் சேர்த்தவர்' எனும் உலக சாதனையை பதிவு செய்திருந்தார் லாரா. அவரது நீண்டகால சாதனையை பேர்த்தில் 6 மாதத்துக்கு முன்பு சிம்பாப்வேக்கு எதிரான போட்டியில் அவுஸ்திரேலியாவின் மாத்யூ ஹேடன் (380 ஓட்டங்கள்) முறியடித்தார்.*



*2ஆவது வீரர்: முன்னதாக ஞாயிற்றுக் கிழமை நடைபெற்ற ஆட்டத்தில், ரெஸ்ட் போட்டியில் இருமுறை 3 சதங்களை அடித்த 2வது வீரர் எனும் சிறப்பை லாரா பெற்றார். அவுஸ்திரேலிய ஜாம்பவான்சேர் டொனால்டு பிராட்மன் மட்டுமே லாராவுக்கு முன்பு 2முறை 3 சதங்களை அடித்துள்ளார்.*

## உதைபந்தாட்டம்



*பிரேசிலின் வரும்கால நம்பிக்கை நட்சத்திரம் ரொனால்டினோ!*

*ஸ்பெயினில் உள்ள வால்லாடுலிட்டில் சனிக்கிழமை நடைபெற்ற ஸ்பெயின் லீக் கால்பந்தாட்டப் போட்டியில், வால்லாடுலிட் அணி வீரர் பேப்லோ பாஸை மீறி அந்தரத்தில் பந்தைத் தடுக்கிறார் பார்சிலோனா அணிக்காக விளையாடும் பிரேசில் நட்சத்திர வீரர் ரொனால்டினோ (வலது). இவர். ஆட்டத்தின் 55ஆவது நிமிடத்தில் சிவப்பு அட்டைக்குள்ளாகி வெளியேறினாலும் அணி 3-1 என வெற்றி பெற்றது.*

## ரெனிஸ்

*Florida Open (அமேலியா தீவுகள்) ரென்னிஸ் அரையிறுதியில்*

*ஜஸ்டின் ஹெனின் மொரேஷ்மோவிடம் அதிர்ச்சி தோல்வி*

*அமேலியா தீவுகளில் நடைபெற்ற வரும் மகளிர் ரென்னிஸ் போட்டியில் நம்பர் - 1 வீராங்கனை ஜஸ்டின் ஹெனினை வீழ்த்தி அமெலி மொரேஷ்மோ இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றார். இந்தப் போட்டிக்கான அரையிறுதிப் போட்டியில் பிரான்சின் அமெலி மொரேஷ்மோவும், பெல்ஜியத்தின் ஜஸ்டின் ஹெனினும் மோதினர். இதில் 6-7, (4-7), 7-5, 6-3 என்ற செற் கணக்கில் மொரேஷ்மோ வென்றார்.*

**எஸ். கணேஷ்**

*இறுதிப் போட்டியில் அமெரிக்காவின் லிண்ட்சே டேவண்போர்டை எதிர்த்து மொரேஷ்மோ விளையாடுகின்றார். மற்றொரு அரையிறுதியில் டேவண்போர்ட் 3-6, 6-4, 6-1 என்ற செட் கணக்கில் ரஷ்யாவின் நாடியா பெட்ரேவாவை வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு முன்னேறினார்.*

*2001 ஆம் ஆண்டு இங்கு நடைபெற்ற போட்டியில் சம்பியன் பட்டம் வென்ற மொரேஷ்மோ, ஹெனினுக்கு எதிரான அரை இறுதியில் முதல் செற்றை இழந்தாலும் அடுத்த 2 செற்களைக் கைப்பற்றி இறுதிப்போட்டிக்குத் தகுதிபெற்றார்.*

*முதுகு வலியால் அவதிப்பட்டு வந்த மொரேஷ்மோ கடந்த 9 மாதங்களில் விளையாடும் முதல் போட்டி இதுவாகும். இதன் காரணமாக அவுஸ்திரேலியா ஓபன் காலிறுதியில் இருந்து விலகும் நிலை மொரேஷ்மோவுக்கு ஏற்பட்டது.*

*இந்த போட்டியில் சாம்பியன் பட்டம் வென்றால் அது மொரேஷ்மோவின் 11ஆவது பட்டமாகும். ஹெனின் கடைசியாக விளையாடி உள்ள 27 ஆட்டங்களில் (Games) இது 2ஆவது தோல்வி ஆகும்.*

*மற்றொரு அரையிறுதிப் போட்டியில் வென்ற டேவண்போர்ட் 1997ஆம் ஆண்டு நடைபெற்ற இந்த போட்டியில் சாம்பியன் பட்டம் வென்றுள்ளார். கடந்த ஆண்டு நடைபெற்ற இந்த போட்டியில் டேவண்போர்ட் ரன்னர் அப் (Runner-Up) பட்டம் வென்றார்.*

*புளோரிடா ரென்னிஸ்: டேவண்போர்ட் சாம்பியன்*

*புளோரிடாவில் உள்ள அமேலியா தீவுகளில் நடைபெற்ற பாஸ்ச் அண்ட் லோம்ப் ரென்னிஸ் போட்டிக்கான சாம்பியன் பட்டத்தை அமெரிக்காவின் லிண்ட்சே டேவண்போர்ட் தட்டிச் சென்றார். இது அவரது 40ஆவது சாம்பியன் பட்டமாகும்.*

*இந்த சாம்பியன் போட்டிக்கான இறுதிப் போட்டியில் அமெரிக்காவின் டேவண்போர்ட்டும், பிரான்சு வீராங்கனை அமெலி மொரேஷ்மோவும் மோதினர். இந்த போட்டியில் 6-4, 6-4 என்ற செட் கணக்கில் டேவண்போர்ட் வெற்றி பெற்றார்.*

*இந்த நிலையில் வெற்றிக்குப் பின்னர் பேட்டியளித்த டேவண்போர்ட் கூறுகையில், "கடுமையாகப் போராட வேண்டும். ஆக்ரோஷமாக விளையாட வேண்டும் என்ற திட்டத்துடன் இந்த போட்டியில் விளையாடினேன். போட்டியின்போது நீண்ட நேரம் விளையாடுவதை தவிர்த்து விரைவில் புள்ளிகளை குவிக்க வேண்டும் என்ற திட்டத்துடன் விளையாடினேன். அதன்படி சிறப்பாக விளையாடினேன்" என்று கூறினார்.*


*இந்த போட்டியில் மொரேஷ்மோ 5 Double Bold புரிந்தார். இந்த வெற்றி பெற்ற டேவண்போர்ட்டுக்கு சுமார் 4.6 மில்லியன் USடொலர் தொகையான கிடைத்தது. இந்த போட்டியில் ரன்னர் அப் பட்டம் வென்ற மொரேஷ்மோவுக்கு சுமார் 2.4 மில்லியன் US$ பரிசுத் தொகையாக கிடைத்தது.*

*தோல்வியுற்றாலும், இந்த போட்டியில் விளையாடியதன் மூலம் தன்னுடைய தன்னம்பிக்கை வளர்ந்திருப்பதை மொரேஷ்மோ கூறினார். மூன்று முறை கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்றுள்ள டேவண்போர்ட், 1997ஆம் ஆண்டு நடை-பெற்ற இந்த போட்டியில் சாம்பியன் பட்டம் வென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.*



**வீட்டில் பூச்சி, எலித் தொல்லையா?**



வீடுகள், தொடர்மாடி வீடுகள், தொழிற்சாலைகள், வியாபார நிலையங்கள் போன்றவற்றில் பூச்சி, எலித் தொல்லையா?
கவலையை விடுங்கள்.
முற்றாக ஒழிக்க அழையுங்கள்.




No Spraying
- No Smelling
- No Moving



Call: Kanthan Tel: 416-283-9538

**NTE AUTO**

**New Trade Engineering Inc.**



**ஸ்காபரோவில் 13வது வருட தன்னிகரற்ற சேவை**

உங்கள் சகலவிதமான ஐரோப்பிய, ஜப்பானிய, அமெரிக்க வாகனத் திருத்த வேலைகளுக்கு நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்.

**Also Air Condition Service & Repair**



**SIVABALAN**

**416.750.1573**

**என். ரி. இ. ஓட்டோ இங்க்**

**151 NATUCKET BLVD., UNIT #12, SCARBO., ON**

IN NEW MILLENNIUM WE ARE ENTERING 11TH YEAR SERVICE IN SCARBOROUGH

**YARLCAN**

**STEAM CLEANING**

உங்கள் சகலவிதமான
Cleaning
தேவைகளுக்கும்
அழையுங்கள்-

- **DUCT CLEANING**
- **CARPET CLEANING**



மோகன்: (905) 887-7436
Cell: (416) 721-9709




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நாமும் நமது இல்லமும்

185

## RBC கருத்துகளின்படி வீட்டின் விலை அதிகரிக்கும்

அண்மையில் RBC / IPSOS REID இன் கருத்துக்களின்படி (இக்கணிப்பீடு Feb 03, தொடங்கி February 15, 2004 வரை எடுக்கப்பட்டது.) ஒன்ராறியோவில் வீடு விற்றல் வாங்கலில் 2004ஆம் ஆண்டும் ஒரு சிறப்பான ஆண்டாக இருக்கும் என்று எதிர்வு கூறப்பட்டுள்ளது. எதிர்வரும் 2 வருடங்களில் 24% மான ஒன்ராறியோ மக்கள் வீடுவாங்க இருப்பதாக கூறியுள்ளார்கள். இவர்களில் 45% வீதமானோரின், கூற்றின்படி சரியான வீட்டை கண்டுபிடிப்பதே மிகக் கஷ்டமான விடயமாக இருக்கும் என்று கூறியுள்ளார்கள்.

RBC Royal Bank

RBC, Royal Bank இன் 11ஆவது வருடாந்த "Home Owner - Ship' கருத்து எடுப்பின் போது 87% ஆனவர்களின் கூற்றின்படி 'வீடு வாங்குதல் சிறந்த அல்லது மிகச்சிறந்த முதலீடாக இருக்கும் என்று கண்டுபிடிக்கப்பட்டது. இவர்களில் 66% ஆனவர்கள் தற்பொழுது தமது சொந்தவீட்டில் இருப்பதாகவும் அடுத்த இரண்டு (2) வருடங்களில் இப்பொழுது வசிக்கும் வீட்டின் அளவைவிட பெரிய வீடுவாங்க இருப்பதாக 24% ஆனவர்கள் கூறியுள்ளார்கள்.

இந்த வருடம் வாங்க இருப்பவர்கள் எனக் கூறப்பட்ட 24% ஆனவர்களின் எண்ணிக்கை கடந்த வருடம் (2003) போலவே காணப்படுகின்றது. இதனால் இந்த வருடமும் வீட்டுசந்தை ஆரோக்கியமானதாக இருக்கும் என்று நம்பலாம். வீடுவாங்க இருக்கும் இவர்களில் 1/10 பங்கினர் எதிர்வரும் ஆறு மாதங்களில் வாங்க இருப்பதாகவும் கூறியுள்ளார்கள்.

சொந்தமாக வைத்திருப்பவர்களில் 54% ஆனவர்களிற்கு மோட்கேஜ் உண்டு. இவர்களில் சராசரியாக இருக்கும் மோட்கேஜின் பெறுமதி $104,139 ஆகக் காணப்படுகின்றது. இந்தப் பெறுமதி கனடிய மட்டத்திலும் ஒரே அளவினதாக காணப்படுகின்றது.

ஒன்ராறியோவில் வாழும் மக்களில் வீடு வாங்க இருப்பவர்களில், 71% ஆனவர்கள் தனியான வீடு அல்லது இரண்டு சேர்ந்த

**ராஜா மகேந்திரன்**

வீடு (Semi - Detached) களே வாங்க விரும்புவதாகவும் கூறியுள்ளார்.

மேலும் ஒரு தகவலின்படி அடுத்த இரு வருடங்களிற்குள் 62% ஆனவர்கள் ஏற்கனவே கட்டப்பட்ட வீடுகள் (Resale House) வாங்க இருப்பதாகவும் 34% வீதமானோர் புதிதாக நிர்மானிக்க இருக்கும் வீடு வாங்க இருப்பதாகவும் கூறியுள்ளார்கள்.

### வீடு விற்பனையில் சில சங்கதிகள்

- 2004 பெப்ரவரியில் விற்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை 6,060 (Treb இன் பகுதியில்)

குறிப்பு - ஒரு மாதத்தில் 6,000 இற்கு மேற்பட்ட வீடுகள் விற்றால் அந்த மாதம் வீட்டுச்சந்தையில் மிகவும் ஆரோக்கிய மான மாதமாக கொள்ளப்படும்.

- GTA இல் பெப்ரவரி 2004 இன் சராசரி வீட்டு விலை $310,190.
GTA இல் ஜனவரி 2004 இன் சராசரி $295,989
(5% அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது)

- Unioville இல் இந்த வருடத்தில்



கனடிய பொருளாதாரதில் "Housing Industry" மிகமுக்கியமானதாகும். கடந்த வருடத்தில் (2003) இல் வீடு நிர்மானம், வாங்கல், விற்றல், திருத்தவேலைகளிற்கு என $154 பில்லியன் பணம் செலவிடப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது. வீடு விற்றல், ஒரு

முக்கியமான பொருளாதார அளவு கோலாக் கணக்கிடப்படுகின்றது. இதனால் 2004 ஆம் ஆண்டும் ஒரு சிறந்த ஆண்டாக இருக்கும் என எதிர்வு கூறலாம். ஒன்ராறியோவில் வீட்டை

ஆகக்கூடியதாக விற்கப்பட்ட வீட்டின் விலை $799,000

- Industrial / Commercial - கட்டிடத்தின் சராசரி விலை $66.48 sqft.

### மோட்கேஜ் பலவிதம் ஒவ்வொன்றும் ஒருவிதம்

1. Closed Mortgage
2. Open Mortgage
3. Variabble Rate Mortgage
4. Fixed Rate Mortgage
5. Short term Mortgage / Long term Mortgage
6. Conventional Mortgage / High Ratio Mortgage

### மீண்டும் வட்டிவீதத்தில் சரிவு

இந்த ஆண்டில் 3ஆவது தடவையாக வட்டிவீதத்தில் தளர்ச்சி ஏற்படுத்தப் பட்டுள்ளது. ஏப்ரல் 13, 04 அன்று ஏற்படுத்திய 0.25 வீதக்குறைப்பினால் புதிய வங்கிவட்டிவீதம் 2.0% ஆக குறைந்துள்ளது. இதனைத் தொடர்ந்து கனடியவங்கி நிறுவனங்களும் தமது முதன்மை வட்டிவீதத்தை 1/4 வீதத்தில் இறக்கியுள்ளது. இதனால் இப்பொழுதுள்ள முதன்மைவட்டி வீதம் 3.75% ஆகும்.


Raja M. Mahendran, P. Eng.
Broker/ Owner
Office - 416- 321-6969
Direct: 416 315-9397
Email: raja@mahendran.ca

**Interest Rate**

| | |
|---|---|
| 5 YrsMortgage | 4.49% |
| 3 Yrs Mortgage | 3.90% |
| Prime Rate | 3.75% |
| Bank rate | 2.00% |





HOUSE FOR SALE

DETACHED 2 STOREY, 4 BED-ROOM, 2 BEDROOM BSMT APT. SEP. ENTRANCE, ONLY 2½ YEAR NEW DOUBLE GARAGE, BRICK HOUSE CLOSE TO HIGH SCHOOL, JUNIOR SCHOOL, MALL, ETC. HIGHGLEN & MIDDLEFIELD, 5 WASHROOMS. ASKING ONLY $474,900.

Raja Mahendran
416-315-9397

CONDO. FOR SALE

2 BEDROOM +DEN, CENTRAL AIR, 2 WASHROOM, ENSUITE LAUNDRY, WARDEN & FINCH ASKING ONLY $168,900

*********


CONDO. FOR RENT

KENNEDY & EGLINTON
1 BEDROOM
ALL INCLUSIVE $925.

Raja Mahendran
416-315-9397

MORTGAGES

Five Years closing mortgage rates (அடமானம்) 4.9% on $100,000.00 per month installment comes out $550.00. For different time period closing rates are given below


LOW - LOW RATES AVAILABLE. TO GET BEST RATE IN TOWN PL. CALL: ANIL JOSHI

Variable Prime rate 0.65% and Prime rate 4.50%
Some conditions may apply







For more information call:

**Anil Joshi** at

**416.888.1072**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உள்ளங்கை, கால்களின் வர்மம் புள்ளிகள்

## Hand & Foot Reflexology

எமது உடம்பின் பல்வேறு பாகங்களிலும் சக்தி சஞ்சரிக்கிறது. சக்தி இல்லாவிடில் எமது உடம்பு செயற்படாது ஸ்தம்பித்து விடும். இந்த சக்தி அன்றாடம் நாம் உண்ணும் உணவு, பானங்கள், சுவாசிக்கும் சுவாசம் இவற்றால் கிடைக்கிறது. இந்த சக்தி பதிநான்கு வாய்க்கால்களில் சதா ஓடியவண்ணம் இருக்கிறது. இப்படி ஓடும் சக்தியில் எங்காவது தடை ஏற்பட்டால் தடை ஏற்பட்ட இடத்திற்கு மேற்பாகத்தில் சக்தி தேங்கியும் தடை ஏற்பட்ட இடத்திற்கு கீழ் சக்தி குறைந்தும் காணப்படும் என்பதை எவரும் ஊகித்துக்கொள்ளலாம். இந்த தடை நீடித்தால் அவ்விடத்தில் உள்ள கலன்களும் உறுப்பும் பாதிக்கப்பட்டு நோய் தோன்றும் என்பதே வர்மப்புள்ளி வைத்திய முறையை கண்டுபிடித்து


### டாக்டர். சி.வ. பரராஜசிங்கம், PH.D
### வவுனியா, இலங்கை


சித்தர்களும் மருத்துவர்களும் அறிந்து கொண்ட உண்மை. இதன்பிரகாரம் உடம்பில் உள்ள வாய்க்கால்களில் தடை ஏற்பட்டால் அதை நாடிப்பரிசோதனை, குணங்குறிகள் மூலம் கண்டறிந்து. அந்த தடைகளை விரைவில் நீக்கிவிட்டால் நோய்கள் குணமாகிவிடும். தடை நீங்கிய சக்தி வாய்க்கால் தடையின்றி செயற்படும் என்பதாகும். உடம்பிலுள்ள பல உறுப்புக்களின் வர்மம்புள்ளி நிலைகளை உள்ளங்கை கால்களில் உள்ளன. அவ்விடங்களை நன்கு அழுத்துவதால் பல்வேறு உறுப்புக்களில் ஏற்பட்ட சக்தி தேக்கம் சமனப்பட்டு நோய்கள் குணமாகிவிடும் என்ற உண்மையை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கண்டறிந்து உலகிற்கு விளக்கியுள்ளனர் எமது சித்தர்கள். இந்த பொது விசயத்தை, தம்சுயநலம் கருதிய சிலர் வேறு எவரிற்கும் தெரியப்படுத்தாத காரணத்தினால் மக்கள் மத்தியில் பிரபல்யமாகவில்லை என்பது எவரும் மறைக்கமுடியாத உண்மை. ஆனால் சீனரும், ஜப்பானியரும் இதை நன்கு ஆராய்ச்சி செய்து தம்மக்கள் மத்தியிலும் பரப்பி, உலகிற்கும் பரப்பி சாதனை படைத்துள்ளனர் என்றால் அது மிகையாகாது. இது 'அக்கியூபங்ஷர்', 'அக்கியூப்றசர்', 'றிப்ளெக்ஸோலொஜீ' ( Acupuncture, Acupressure, Reflexology) என்னும் முறைகளெனப்பரவி, பல்வேறு நோய்களை குணமாக்கி சாதனை படைத்திருப்பதை நாம் காணக்கூடியதாக இருக்கிறது.

**செய்யும் முறை**

இந்தப் புள்ளிகளை தினம் அழுத்துவதால் அந்த உறுப்புக்களில் ஏற்பட்ட நோய்கள் படிப்படியாக நீங்கி குணமாகிவிடும். குறிப்பிட்ட புள்ளிகளில் காயம், கடும்வலி, வேக்காடு, காணப்பட்டால் அவ்விடத்தை அழுத்தக்கூடாது. அவ்விடத்தை ஆரம்பத்தில் மென்மையாக தொட்டு 'நோக்கு வர்ம' முறைப்படி கண்ணால்பார்த்து வந்தால் படிப்படியாக வலி, வேக்காடு குறையும். அதன்பின் மென்மையாக அழுத்தலாம். காயமாகில் 'நோக்கு வர்ம' முறைப்படி பார்வையால் காயத்தை குணப்படுத்தியபின்பே அழுத்தவேண்டும். அழுத்துவது எப்படியெனின் அந்தப் புள்ளியின் மேல் பெருவிரலை வைத்து மேல், கீழ், இடம், வலம் என அழுத்தி பின் இடமிருந்து வலமும், பின் வலமிருந்து இடமுமாக அழுத்த வேண்டும். உறுப்புகளில் காந்தல், வலி, வேக்காடு அதிகமாக இருந்தால் அந்த வர்மப்புள்ளியை வலமிருந்து இடமாக (Anti-Clockwise-Rdeucing the energy) வட்டமாக சுற்றி அழுத்தினால் அந்த உறுப்பில் சக்திதேக்கம் குறைந்து நோய் விரைவில் குணமாகும். அந்த உறுப்புக்களில் விறைப்பு, மதமதப்பு, சோர்வு இருப்பின் இடமிருந்து வலமாக (Clockwise-Stimulating the Energy) வட்டமாகச் சுற்றி அழுத்தினால் அந்த உறுப்புக்கு சக்தி தேக்கம் கூடி நோய் விரைவாக குணமாகும். குறிப்பிட்ட உறுப்புக்களில் பாதிப்பு ஏற்பட்டால் இந்த வர்மம்புள்ளிகளில் வலி, எரிவு அல்லது மதமதப்பு தோன்றும். பாதிப்பு நீங்கியதும் அப்புள்ளிகளில் தோன்றிய அசௌகரியம் நீங்கிவிடும்.

வர்மப்புள்ளிகளும் அவற்றுடன் தொடர்புள்ள உறுப்புக்களும்

1. Brian - மூளை - இந்தப்புள்ளி கை, கால் பெருவிரலின் முற்பாகத்தில் நுனிக்கு கீழ் உள்ளது. இதை அழுத்துவதால் மூளை பலப்படும். ஞாபகசக்தி கூடும்.

2. Mental Nerves - மனத்தின் நரம்புகள் - இந்த புள்ளியும் பெருவிரலின் முற்பாகத்து முதல் அங்குலாஸ்தியில் உள்ளது. இதையும் அழுத்துவதால் நரம்பு மண்டலம் பலப்படுவதுடன் ஞாபகசக்தியும் கூடும்.

3. Head Nerves - தலை நரம்புகள் - இந்த வர்மப்புள்ளி பெருவிரல் முற்பாகத்தில் இறுதியில் உள்ளது. இதுவும் நரம்புமண்டலத்தை பலப்படுத்தும் சக்திவாய்ந்தது. இவ்விடத்தை அழுத்துவதால் நரம்புமண்டலம் பலப்படுத்துவதுடன் ஞாபக சக்தியும் கூடும்.

4. Throat - தொண்டை - இந்தப்புள்ளி பெருவிரலுக்கும் சுட்டுவிரலுக்கும் இடையில் உள்ள இறைக்கு சற்று கீழ் உள்ளது. இதை அழுத்துவதால் தொண்டையில் ஏற்படும் வேக்காடு அழற்சி ஆகியவை நீங்கி குரல்வளமும் சீராகும். 'ரன்சில்' வேக்காட்டிற்கும் (Tonsillitis) இந்தப்புள்ளியை அழுத்தி நிவாரணம் காணலாம்.

5. Neck - கழுத்து - இந்தப்புள்ளி இரு கை, கால் பெருவிரல் இணைப்பில் உள்ளது இதை அழுத்துவதால் கழுத்தில் ஏற்படும் சுழுக்கு, இசிவு இவைகள் குணமாகும்.

6. Thyroid & Parathyroid - தைறோயிடும் பராதைறோயிடும் - இந்த வர்மப்புள்ளி இரு உள்ளங்கை, கால்களில் பெருவிரலுக்கு நேர் கீழே உள்ளது. இது தொண்டையின் இருமருங்கிலும் உள்ள தைறோயிட், பராதைறோட்டின் வர்மப்புள்ளி. இந்தக்கோழங்கள் உடம்பிலுள்ள அத்தனை உறுப்புக்களையும் இயக்க வல்லது. இதுசுரக்கும் ரசமே எம்மை அன்றாடம் நன்கு இயங்க வைக்கிறது. இதன் செயற்பாடு அதீதமானால் 'தைறொக்சிகோசிஸ்' என்னும் நோய் தோன்றி உடம்பை மெலியச் செய்வதுடன் படபடப்பு, கழுத்தின் இருமருங்கிலும் கட்டிகள் தோன்றல் அதிக வியர்வை போன்ற நோய்களை உருவாக்கும். உடம்பின் நோய் எதிர்ப்புசக்தியை குறைக்கும். இதன் செயற்பாடு குறைந்தால் எடைகூடுதல், சோம்பல், 'உற்சாகக்குறைவு அதிக நித்திரை போன்ற நோய்களை தோற்றுவிக்கும். பாராதைறோயிட் என்னும் சிறியகோழம், தைறோயிட் கோழத்தின் நடுப்பகுதியில் உள்ளது. இது சுரக்கும் ரசம் உடம்பில் சுண்ணாம்பு சத்துசேர்வதையும், 'பொஸ்பரஸ்' (Phosphorus) என்னும் நரம்பை பலப்படுத்தும் தாதுப்பொருள் சேர்வதையும் ஊக்குவிக்கிறது. இதன் செயலிழப்பால் உடம்பில் மேற்குறிப்பிட்ட தாதுப்பொருட்கள் சேராது அவற்றின் குறைபாட்டால் பலவித நோய்களும் தோன்றும். இந்தப்புள்ளிகளை நன்கு அழுத்தி இந்தக் கோழங்களை நல்ல நிலையில் வைத்திருக்கலாம். நோய்களையும் குணப்படுத்தலாம்.



7. Spine - முள்ளந்தண்டு - இது பிடரியிலிருந்து அடி முதுகுவரை உள்ள முள்ளந்தண்டு எலும்புகள், முள்ளந்தண்டு இவற்றால் இயங்கும் அத்தனை உடல் உறுப்புக்களையும் குறிக்கும். இங்கிருந்தே நுண்ணிய நரம்புகள் உடம்பிலுள்ள அத்தனை உறுப்புக்களுக்கும் சென்று அவற்றை நன்கு செயற்பட உதவுகின்றன. இவற்றின் செயற்பாடு குன்றினால் உடம்பே இயங்காமல் போய்விடும். பாரிசவாதம் போன்ற நோய்களும் தோன்றும். இந்த வர்மப்புள்ளி கைகளின் பிற்பாகத்தில் பெருவிரலுக்கும் சுட்டு விரலுக்கும் இடையிலுள்ள இறைக்கு கீழே நேராக மணிக்கட்டுவரை உள்ளது. கால்களின் நடுவில் பெருவிரலுக்கு நேர்கீழே பிறைவடிவில் உள்ளது. இந்தப்புள்ளியை அழுத்துவதால் இந்த உறுப்பு பலப்பட்டு அது செயற்படுத்தும் அத்தனை உறுப்புக்களையும் நன்கு செயற்படச் செய்யும். முள்ளந்தண்டில் ஏற்படும் பலவித நோய்களும் குணமாகும்.




**MOHAN HOMEOPATHIC CLINIC**

Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

- STRESS
- ALLERGIES
- SKIN PROBLEM
- SEXUAL PROBLEMS
- RESPIRATORY PROBLEMS
- CHOLESTEROL
- TUMOR
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM / NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- FOOT PROBLEM
- TREAT WITH MASSAGE THERAPY

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | |
|---|---|
| Cough | Flu |
| Depression | Anxiety |
| Asthma | Tonsillitis |
| Gout | Arthritis |
| P.M.S | Leucorrhea |
| Migraines | Hair Loss |
| Diabetes | Cystitis |
| Cancer | Prostatitis |
| Obesity Hemorrhoids | |
| Stumatitis | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/ 416-291-3022

5200 Finch Ave, East Suite 210
(At Middle Field), Scarborough, M1S 4Z4

**WINDOW COVERING**

உங்கள் எண்ணம் போல் வண்ண, வண்ணத் திரைச் சேலைகளுக்கு இன்றே அழையுங்கள்.

BLINDS DRAPERIES AND SHUTTERS
- Venetian Blinds
- Vertical Blinds
- Roller Shades
- Pleated Shades
- Cellular Shades

FREE ESTIMATE

இருபத்தெட்டு வருடங்களுக்கு மேல் அனுபவம் உள்ளவர்களால் உங்கள் வீட்டிற்குத் தேவையான திரைச் சேலைகளைத் தைத்துக் கொடுக்கப்படும்.



5210 Finch Ave., E. Unit #3 (Middlefield & Finch) Scarborough, ON

விபரங்களுக்கு: என். செல்வம்

416.332.8482 / 416.419.9247 / 905.201.7733





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாகன விபத்தில் காயமடைந்துவிட்டீர்களா?

**FIREMAN LOFRANCO**
PERSONEL INJURY LAWYERS

அனுபவசாலிகளின் ஆலோசனை பெற்றபின்
உங்கள் முடிவை எடுங்கள்




SPECIALIZING IN SERIOUS PERSONAL TRAUMATIC INJURIES AS RESULT OF A MOTOR VEHICLE ACCIDENT

• FRACTURES • SPINAL CORD INJURY • BRAIN OR HEAD INJURY • SCARRING OR DISFIGUREMENT • INTERNAL INJURIES OR DEATH

**உங்களுக்குத் தெரியுமா?**

நடந்த விபத்து உங்கள் தவறில்லாவிடின் உங்களால் பணமாக வலி, வருத்தம், வாழ்வில் இழந்த மகிழ்ச்சி, சம்பள இழப்பீடுகள் அத்துடன் **$172,000.00** வரை இழப்பாகவும் மற்றும் பல்வகையான இழப்புக்களுக்கு நஷ்டஈடுகள் பெறமுடியும்.

**உங்களுக்குத் தெரியுமா?**

நடந்த விபத்து உங்கள் தவறாகவிருப்பின் உங்களால் **$172,000.00** வரையும் வருமான இழப்பீடாக வாரத்திற்கு **$400** வரையும் இன்னும் பலவகை இழப்பீடுகளையும் பெறமுடியும்.

5255 YONGE ST. SUITE 1300, TORONTO - MISSISSAUGA - KITCHENER

**இலவச ஆலோசனைகளுக்கு இன்றே அழையுங்கள்**

**தீபன் - (416) 505-9804**
24 Hours Direct Line

# SHAN TRUCK & FORKLIFT DRIVING SCHOOL




**பயிற்சி நிலையம்**




*5 Lessons for $299*

*10 Lessons for $499 ( 1 Road Test Free)*

*20 Lessons For $899 ( Including 2 Road Test Free)*



சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்: **Pl. Call: Harry / Thanga**

**Tel: 416-525-7958**

**Scarborough East End**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகைச்சுவைத் தொடர்....



# ராசம்மா ராச்சியம்




106




ஒருவரிடம் வாங்கிய அல்லது
கொடுத்த கடனை மறக்கலாம்.
உதவி பெற்றவர்களையும் உதவி
செய்தவர்களையும் மறக்கலாம்.
காதலை...மறக்கலாம்



புது யுகத்தில் மனைவி, பிள்ளைகள் உற்றார், பெற்றார், உறவினரை மறக்கலாம். என்ன இருந்தாலும் இளமைக்கால அனுபவங்கள், பழைய அனுபவங்களை மறக்க முடியுமா? பாடசாலைக்கு பிந்திப் போய், மெற்னி ஷோ பார்க்க நேரத்திற்கு Q வில் நின்று நண்பர்களுடன் கழித்த, களித்த நாட்களை மறக்க முடியாது






அன்று ஏதாவது படம் பகலில் பார்க்காவிட்டால் இரவில் தூக்கம் வராது. சிவாஜி K.R. விஜயா, எம். ஜி. ஆர் - ஜெயலலிதா படங்கள் பார்த்த படியால் தான் ஆடலழகி ஜெயலலிதா பட்டம் பெறவும் பதவியில் உச்சம் பெறவும். காரணமாக இருந்தது. திரையுலகில் வளர்ந்த எம்மையெல்லாம் ஆடலழகி ஜெயலலிதா நினைத்தே பார்ப்பதில்லை.







பழைய நினைவுகளை மறக்கமுடியுமா, பிறிம்லி மீனாவின் மகன் விழுந்தடித்துக் கொண்டு வந்தான். உலகப்பு உலகப்பு உலகப்பு யு நோ கன ஸ்கூல் போய்ஸ் ஐ பொலிஸ் கச் (Catch) பண்ணியிட்டினம் McCowan & Finch இல் பொலிஸ் பிடிச்சதாம் இளமையில் சிறை முதிர்ந்தால் இவர்களின் வாழ்க்கை 12, 13, 14, 15 வயதுகளில் நாங்கள் ஊரில் திரியும் பொழுது வீதியில் ஊர் கண்காணிப்பு குழு இன்று சர்வதேச நாட்டு கண்காணிப்பு குழு சண்டையையும் தேர்தலையும் கண்காணிப்பது போல் ஊர் கண்காணிப்பு குழு அதாவது ஊரிலுள்ள பகுதி நேர சொந்தக் தொழிலும் மிகுதி நேர ஊர் பிரச்சினை சம்பளமின்றி தீர்க்கவும் உருவாக்கவும் இருக்கும் ஒரு குழுவினர் செல்போன் இன்றி செய்தி பரப்பவும் கொம்பியூட்டர் இன்றி கொழுவல் செய்தி பரப்பவும் வேலிக்கு வேலி வேண்டாத செய்திகளை பரிமாறவும் 24 மணிநேரமும் இயங்கிக் கொண்டிருக்கும் இதனால் பொலீஸ் கச் பண்ணும் அளவுக்கு விடயம் பெருக்காது.













உலகண்ணை பிறிம்லி மீனாவின்ரை மகன் சொன்னது நானும் றேடியோவிலை கேட்டனான். பிள்ளையளுக்கு சொந்தபந்தம் இல்லை கலியாணவீடு பிறந்தநாள் எண்டாலும் 10, 15 நிமிடம் எண்டாலே போறிங் எண்டு சொல்லிப் போட்டு மோலுக்கும் அங்கையும் இஞ்சையும் எண்டு பிள்ளையள் திரிய அப்பு, ஆச்சா குஞ்சியப்பு குஞ்சியாச்சி, சின்னம்மா, சித்தப்பா, பெரியப்பா, பெரியம்மா, மாமா, மாமி என்ற உறவு முறை சில நாடுகளில் இனங்கள் பிரிவது போல பிரிந்திருக்க சமூக அமைப்பும் கலாசார உணர்வும் ஒருதருக்கும் இல்லையென சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் சமய சொற்பொழிவு நிகழ்த்தியது போல சொல்லி முடித்தா ஆட்டிலறி அன்னம்மா.








சின்னண்ணை, சீனியண்ணை, ஆசையண்ணை, பெரியண்ணை, சின்னமாமா, பெரியமாமா, ஆசைமாமா, ஆசைமாமி என கூப்பிட்டு உறவு கொண்டாடி பெற்றோர் மனஸ்தாபப்பட்டாலும் அதை தெரியாமலும் தெரிஞ்சுகொள்ளாமலும் ஒன்றுவிட்ட சகோதரங்களுடன் பழகி குடும்ப உறவுகள் ஒன்றிணைந்து இருந்தன.

கடந்த வருடம் ரொறொன்ரோவில் வெளியான ஜனகன் பிக்சர்ஸ் ஸ்ரீ முருகனின் “புது உறவு” என்னும் திரைப்படம் புலம்பெயர்ந்த நாட்டில் பெற்றோர், சண்டையில் உறவின்றி இருப்பதையும் அவர்களின் பிள்ளைகள் ஒன்றுவிட்ட அண்ணர் தங்கை சேருவது மக்கள் மனதில் சிறு தாக்கத்தையும் ஏக்கத்தையும் காட்டியிருக்கிறது.

ஈஸ்ரர் விடுமுறையில் பெரியவெள்ளி லீவு பல கோயில்களில் எமக்கு கிடைத்த சந்தர்ப்பத்தை விடாது சுவாமி தரிசனம் பண்ணியாச்சு. ஆனால் 13 ஆம் திகதி சித்திர புதுவருசப் பிறப்பு எல்லோருக்கும் வேலை. ஒருத்தர் கூட கோல் எடுத்து புது வருட வாழ்த்து சொல்லேல்லை என்று சலித்துக் கொண்டிருந்த பொழுது ஹாய் செல்லம்மா அன்ரி, ஹாய் அன்னம்மா அன்ரி என்ற படி ரூபி அறைக்குள் நுளைந்தா.





**அலையடித்து கடல்**
**பிரிவதுமில்லை**

**இடிஇடித்து மேகம்**
**உடைவதுமில்லை.**





- கலகலப்பு தீசன்


# ACTION HONDA

***“WHERE CAR OWNERSHIP IS MADE EASY”***



**புதிய பழைய HONDA**
**வாகனங்களை ஈழத்தமிழ் மகன்**
**சோதீஸ்**
**இடம் பெறும்போது**

- சிறந்த சேவை
- Life time Oil change
- மற்றைய எல்லா இடங்களையும் விட கிடைக்காத குறைந்த விலைக்கு உத்தரவாதம்.



*This Month Special*


***SPRING CLEARANCE SALE***

**416-704-1179**

**அலுவலக நேரம்**

**Mon, Fri, Sat: 9 am - 6 pm**
**Tues, Wed: 12 noon - 9 pm**

**4334 Kingston Rd, Scarborough**





விடுகதை

*அக்காள் விதைத்த முத்து; அள்ளமுடியாத முத்து; வாசலிலே முத்து; வாரமுடியாத முத்து அது என்ன?* *கோலம்*

*அங்கே சிலுப்புவாள்; இங்கே சிலுப்புவாள்; வீடு முழுவதும் ஆடியபின்னே கதவிடுக்கில் பதுங்கிக் கொள்வாள் அது என்ன?* *விளக்குமாறு*





சுபமுகூர்த்தப் பட்டுக்கு என்றுமே இராசியான இடம்

‘தமிழர் மத்தியில் தரமான பட்டுப் புடவை மாளிகை’

# நீலம் சில்க்



பட்டுத் தெரிவுகள் அனைத்துக்கும்

“நீலம் சில்க்”

- *SONALIKA PURE SILK*
- *JARDHOSHI SATIN & CREPE SILK*
- *JAPAN CRYSTAL SILK*
- *JAIPUR CRYSTAL SILK*
- *VASUNTHARA NETWORK CREPE*

**T.P: 416-778-7455**
**Fax: 416-778-8484**
1453 GERRARD STREET, EAST
(INDIAN BAZZAR)

**T.P: 416-759-2002**
2378 EGLINTON AVE., E.
(Kennedy Rd. & Eglinton Ave, Scar.)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# வெளிவந்துவிட்டது

# உலக தமிழோசை -07









சிறப்பு விலை $1.50

பாடசாலை மாணவிகள் பலர் குறுக்கு வழியில் விரைவாக பணம் சம்பாதிப்பதற்காக விபச்சாரத்தில் ஈடுபடுகின்றனர். இதற்கு இந்த செல்போன் மிகவும் உதவியாக இருக்கின்றது.

## கமரா போன்; காத்திருக்கும் அபாயங்கள்...

## பைத்தியக்காரத் தனமான ஐடியாக்கள்

## அல்கைடா கையில் அணு ஆயுதம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அறுவை 16

'ஹலோ'
'வணக்கம் சேர். இவர் முத்துலிங்கத்தாற்றை நம்பர் உங்களிட்டை எடுக்கலாமோ?'
'எந்த முத்துலிங்கம் தம்பி'
'அங்கை பல்கலைக்கழகத்திலே பேராசிரியராய் இருந்தார் கலாநிதி முத்துலிங்கம்.'
'அவர் எப்பவோ இறைவனடி சேர்ந்துவிட்டாரல்லே.'
'அட கடவுளே! எனக்குத் தெரியாமற் போச்சு! எப்ப சேர் செத்தவர்?'
அது ஒரு வருடத்துக்கு மேலாகிவிட்டது. தம்பி, நான் வேறு ஒருவருடன் பேசிக்கொண்டிருக்கிறன். பிறகு ஆறுதலாய் எடுங்கோ.'
'சரி சேர். வணக்கம்.'
'ஹலோ!'

## கவிஞர் வி. கந்தவனம்

'மாஸ்டர், எப்படி இருக்கிறியள்?'
'இருக்கிறேன் தம்பி, நீங்கள் எப்படி?'
'பிரச்சினை இல்லை. நாழிகை என்ற சொல்லில் எந்த ளானா வருகுது மாஸ்டார்?'
'மவ்வளவு.'
'ஒரு பஞ்சாங்கத்தில் கொம்பளவு போட்டு எழுதியிருக்கு. அதுதான் கேட்டனான்.
'நன்றி. வணக்கம்.'

'ஹலோ!'
'வணக்கம் ஐயா யோக சுவாமிகளின் ஆயிலிய பூசை வருகிற புதன்கிழமை. வழக்கமான இடம், வழக்கமான நேரம் ஞாபகப்படுத்துகிறோம்.'
'நன்றி தம்பி. வணக்கம்.'

'ஹலோ!'
'ஐயா வணக்கம்.'
'வணக்கம். என்ன புதினம்?'
'புது வீடொன்று வாங்கியிருக்கிறம். குடிபூரலுக்கு நல்ல நாளொன்று பார்த்துச் சொல்லுங்கோ ஐயா.'
'சரியாய்ப்போச்சு! அதுகளெல்லாம் எனக்குப் பார்க்கத் தெரியாது தம்பி. நான் சாத்திரியார் இல்லை. குடிபூரலுக்கு நீங்கள் கூப்பிடும் குருக்களே சொல்லுவாரே நாள்?'



'குருக்களை நாங்கள் கூப்பிடேல்லை. சும்மாய் போய் பாலைக் காச்சப்போறம்.'
'இருந்தாலும் தெரிந்த ஒரு குருக்களிடம் நாளை கேட்கலாந்தானே. இல்லையென்றால் வேறு யாரேனும் ஒரு சாத்திரியாரைக்கொண்டு நாளைப் பார்பியும் தம்பி. வணக்கம்.'


'ஹலோ!'
'பெரியவர் நிற்கிறாரோ?'
'பெரியவர் இல்லை. கந்தவனம் இருக்கிறார்.'
'எங்களுக்குப் பெரியவர் கவிஞர் கந்தவனந்தான். வணக்கம் ஐயா. இண்டைக்குப் பின்னேரம் போலை வீட்டிலை நிப்பியளோ ஐயா?'
'நிற்பேன்'
'ஒருக்கால் வந்து சந்திக்கலாமோ?'
'சந்திக்கலாம். என்ன சங்கதி?'
'இங்கிலீசிலை ஒரு கடிதம் எழுதவேணும் ஐயா.'
'நினைச்சன்! பெரியவர் என்று காதுக்கை பூ வைக்கும்போதே எனக்குத் தெரிஞ்சுபோச்சு சோழியன் குடுமி சும்மா ஆடாதென்று! பின்னேரம் நாலு மணயளவில் வாருங்கோ!'
'சரி ஐயா. நன்றி.'

பத்து இலட்சம் பொன்னும் கேட்டாள்
சத்தியமும் வாங்கிப் போட்டாள் -
சகோதரரே
தாசிகள் நேசம் மோசமே - தொலை
பேசிகள் நேசம் வாழ்கவே!


16 வருடங்களாக தமிழர் மத்தியில் நன்மதிப்பைப் பெற்ற

# யோகாஸ்

## குறுக்கு எழுத்துப் போட்டி இல. 150



**இட - வல**
1. மறுமொழி
3. கால்வாய் (வல-இட)
4. புதுமை
6. காலணி (வல-இட)
7. ஆண்களின் காதணி
8. உடலின் மச்சம் (வல-இட)
9. மீறிச் செல்
10. சொத்து
11. சரி பார்த்தல்
12. இளகிய வெல்லம்

**மேல் - கீழ்**
1. ஆடை
2. நிலம்
3. விளிம்பு
5. நட்சத்திரம் ஒன்று (கீழ்-மேல்)
7. காணி, நிலங்களுக்கு செய்யும் ஒரு வகை ஒப்பந்தம்
8. தயிர் கடையும் கருவி (கீழ்-மேல்)
9. சேர் (கீழ்-மேல்)
10. தொடக்கம் (கீழ்-மேல்)
11. ஒரு எண் (கீழ் - மேல்)
13. ஓமத்தீ வளர்க்கும் குழி (கீழ்-மேல்)

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ஈ | டு | கொ | டு | | ம் | க | நு |
| ர் | கா | | ப | | ய | | க |
| க் | | | ப் | | தி | ட | ர் |
| கு | னி | | சை | | த் | | |
| | த | | ஆ | சு | வா | க | ம் |
| து | த் | மு | | ட | | | ட |
| | னி | | ஒ | ர் | | | ண் |
| சீ | த | ன | ம் | | செ | க் | கு |

சரியான விடைகளில் இருவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர். இவர்களுக்கு "யோகாஸ்" இல் பாவிக்கக் கூடிய $15, $10 Gift Certificates வழங்கப்படும். இதற்கு cash value கிடையாது. விடைகள் April 28, 2004க்கு முன்னர் விளம்பரம் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**149இல் வெற்றி பெற்றோர்**
1) S. Ragulan, Toronto
2)S. Rajaratnam, Etobicoke

* ஆட்டிறைச்சி வியாபாரத்தில் தமிழ் மக்களின் உள்ளங்களை வென்றவர்!
*அன்றாட சந்தையில் மரக்கறி, மீன் வகைகளை தினமும் தருவித்துக் கொடுப்பவர்கள்.
*வாடிக்கையாளர்களின் தொகையில் உயர்ந்தவர்!

(416) 267-0408 731 - 733 Kennedy Road [Ken-Mark Plaza]





# MANIKKANDAN


## Take Out & Catering

தமிழ் தாய் நினைவைக் கொண்டுவரும் தராதரமிக்க, கனடிய கோட்பாடுகளுக்கு அமைய எமது தயாரிப்புகளான சோறு, மரக்கறி, இறைச்சிக்கறி, கடலுணவு, கொத்துரொட்டி வகைகள், ரொட்டி, இடியப்பம், புட்டு, இட்டலி, தோசை, மசாலா தோசை, வடை, Rolls, Cutlets, Patties போன்ற பலவகை உணவுவகைகளைப் பெற்றுக்கொள்ள அழையுங்கள் **மணிகண்டன்.**



*Wedding or any Occasions*
*Special Deals Available*

- சுவை நிறைந்த பல்வேறு வகையான INDIAN SWEETS
- வீட்டில் தயாரிக்கப்பட்ட மாங்காய், தேசிக்காய் அச்சாறு



**இடியப்ப மெஷின் விற்பனைக்கு உண்டு.**




இல்லங்களில் நிகழும் பலவிதமான வைபவங்களுக்கும் தேவையான உணவுகளை ருசித்து மகிழ்ந்திட அழையுங்கள

**மணிகண்டன்.** Pl. Call: Siva **416-283-1260**

*790 Military Trail , Unit 1A*
*Scarborough ON M1E 4P7*



# DEBT & MORTGAGE SOLUTIONS !!



- கடன் தொல்லையா?
- கடன்காரர்களின் தொந்தரவா?
- Credit பிரச்சனையால் Mortgage கிடைக்கவில்லையா?

**கவலைப்படாதீர்கள்!** அனைத்து வித பொருளாதார பிரச்சனைகளுக்கும் தீர்வு காண

*முதல், இரண்டாவது, மூன்றாவது Mortgage பெற அழையுங்கள்.* **ராஜ்**

தொலைபேசி எண் :**416-835-6695**

Call : 'RAJ' for all kinds of
Debt & Mortgage Solution
Lendingtree.ca






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# ஆரோக்கிய வாழ்வு

N. செல்வசோதி

## பவன முக்தாசனம்

அடிவயிற்றில் சேரும் வாயுக்களை வெளியேற்றி உடலுக்கு விடுதலை அளிப்பதால் அந்தப் பெயர்.

செய்முறை எண் 1
1. சவாசனத்திலிருந்து கால்களை ஒன்று சேர்க்கவும்.
2. வலது காலை உயர்த்தி மடித்து கால் முட்டியை வயிற்றை நோக்கிக் கொண்டு வரவேண்டும்.
3. கை விரல்களை ஒன்று சேர்த்து முட்டியைப் பிடித்து வயிற்றை நோக்கி அழுத்த வேண்டும்.
4. இடது காலை மடிக்காமல் தலையை உயர்த்தி எழுந்து முகவாய் கட்டையை வலது கால் முட்டியை நோக்கி கொண்டு வந்து சேர்க்கவும்.
5. சாதாரண மூச்சில் 15 எண்ணிக்கை இருந்து விட்டு தலை, கால்களை பிரித்து விரிப்பின் மீது படுக்கவும்.
6. மாற்று ஆசனமாக இடது காலை மடித்து முன்பு போல் செய்யவும்.
7. வலது இடது என மாற்றி மூன்று முறை செய்து விட்டு சவாசனத்தில் ஓய்வு எடுக்கவும்.



எண் - 2
1. இரண்டு கால்களையும் ஒன்று சேர்த்து உயர்த்தி மடித்து வயிற்றின் மீது கொண்டு வரவும்.
2. கைவிரல்களை ஒன்று சேர்த்து அல்லது தனித்தனியாக கால் முட்டிகளை பிடித்து வயிற்றில் அழுத்தம் கொடுத்து தலையை உயர்த்தி முகவாய் கட்டையை இரண்டு முட்டிகளுக்கு இடையில் கொண்டு வந்து வைக்க வேண்டும்.
3. சாதாரண மூச்சில் 15 எண்ணிக்கை இருந்து விட்டு கால்களையும் தலையையும் பிரித்து மல்லாந்து படுத்து ஓய்வு எடுக்க வேண்டும்.
4.மூன்றுமுறை செய்துவிட்டு சவாசனத் திற்கு வரவேண்டும்.

பலன்கள்
1. வயிற்றில் சுரக்கும் அதிக அமில சுரப்பைக் கட்டுப்படுத்துகிறது. அதனால் அல்சர், வயிற்றில் புற்றுநோய் ஆகியவை வராமல் தடுக்கும்.
2. வாயுக் கோளாறுகளைப் போக்குவதால் புத்துணர்ச்சியை நாள் முழுவதும் அளிக்கிறது.
3. மலச்சிக்கல், செரியாமை, வயிற்றுக் கோளாறுகளை போக்குகிறது.
4. உடல் எடை, அதிக வயிற்று தசை ஆகியவற்றைக் குறைக்கிறது.
5. மாராடைப்பு நோய் இருதய நோய்கள் வராமல் தடுக்கிறது.
6. பிரசவித்த பெண்களின் அடிவயிற்று பெருக்கத்தை குறைக்கிறது.
7. நுரையீரலுக்கு வலிமையை ஊட்டி அதன் செயல்பாட்டினை அதிகரிக்கிறது.
8. மூலவியாதி, இரத்தக்கோளாறுகள், குடல் வால்வு கோளாறுகள் போன்றவற்றை சரிசெய்கிறது.
9. மூட்டுவலி, வயிற்றுவலி, பெண்களுக்கு கருப்பைக் கோளாறுகள் ஆகியவற்றைப் போக்கும்.

குறிப்பு -
1. கழுத்துவலி உள்ளவர்கள் தலையை உயர்த்தாது தரையின் மீது வைத்து கால்களை மட்டும் மடித்து அழுத்தம் கொடுத்து செய்ய வேண்டும்.
2. சாதாரண மூச்சில் பழக வேண்டும். அப்படி முடியாதவர்கள் வயிற்றில் அழுத்தம் குறைவாக கொடுத்து செய்ய வேண்டும்.


# SAYEE DAYCARE

MIDLAND & LAWRENCE / ELLESMERE சந்திப்புக்கு அருாமையிலிருந்து பிள்ளைகளைப் பராமரிக்கப்படும். இரண்டு நேர உணவும் Nessarry RHYMES, NAP TIME, INDOOR, OUTDOOR PLAY TIME உண்டு.



**1 HOUR ——>$1**

**காலை 7:00 மணியிலிருந்து மாலை 10:00 மணிவரை திங்கள் தொடக்கம் ஞாயிறுவரை பிள்ளைகளைப் பராமரிக்கப்படும்.**

SAYENE - 416-750-4354

## DAY CARE



மாதம் தொடக்கம் 12 வயதுச் சிறுவர்களுக்கு சிறந்த பராமரிப்பு. ECA தகுதியும் பலவருட அனுபவமும் தேர்ச்சியுமுடைய ஆசிரியைகள் காலை 7:00 மணி தொடக்கம் மாலை 7:00 மணிவரை முழுநேர, பகுதிநேர (After School Program) உள்ளக, வெளியக விளையாட்டுக்கள், தமிழ், சமயம், ஆங்கிலம் கற்பித்தல். BRIMWOOD BLVD JR PUBLIC SCHOOL க்கு மாணவர்களை அழைத்துச் செல்லும் வசதிகளும் உண்டு. $2.00 / HR.
#1600 Sandhurst Circle (Finch & McCowan.
தொடர்புகளுக்கு: MRS. S. SHANTHABAVAN-416-332-1837


# தமிழர் நிர்வாகத்தில் ஒரு EMBASSY



**விசா கிடைாயது, பாஸ்போட் வழங்கப்படமாட்டாது ஆனால்**

- வீட்டிற்குத் தேவையான தரமான உணவுப் பொருட்கள், (Groceries)
- இலங்கை / இந்திய இனிப்புப் படையல் (Sweets)
- இலங்கை / இந்திய உணவகம் (Restaurant)

சமோசாவிற்கு அழையுங்கள்:
416-332-0944



Embassy அமைந்துள்ள இடம்: Finch / Middlefield
5200 Finch Ave., Scarborough
**4 1 6 - 3 3 2 - 8 4 5 1**

# வீடு விற்பனைக்கு

ஸ்காபரோவில் Neilson & Sheppard சந்திக்கு மிக அருகாமையில் 3 படுக்கை அறைகள் கொண்ட முற்றிலும் புதுப்பிக்கப்பட்ட Town House - வீடு விற்பனைக்கு.

மல்வேர்ண் கடைத்தொகுதி, TTC தரிப்பிடங்கள், HWY 401, அரச கத்தோலிக்க தனியார் பாடசாலைகள், வைத்திய நிலையங்கள் மிக அருகாமையில் **மேலதிக தொடர்புகளுக்கு : ரவி மோகன்**



முற்பணம் இல்லாமலும் வாங்கும் வசதிகள் செய்து தரப்படும்

Century 21
**Ravi Mohan**
Sales Representative
Percy Fulton Ltd. **416-566-1455**
Member Broker
2911 Kennedy Road, Toronto, ON M1V 1S8





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்பிக்கை விதை!

மனித வாழ்க்கை மற்றெல்லா ஜீவராசிகளின் வாழ்க்கையை விடவும் வித்தியாசமானது அல்லது மேலானது. மனிதனுக்குரிய சிந்தனை வளர்ச்சியால் ஏனைய ஜீவராசிகளை வென்றுவிட்டான். மனிதன் தன் அறிவாலும் ஆற்றலாலும் இன்று ஏழாம் அறிவுக்கு ஏறிக் கொண்டிருக்கிறான். மிருகங்கள் மனிதனை மதிக்கலாமே தவிர, வணங்குவதில்லை. மனிதனோ தனக்கும் மேலாய் ஒரு சக்தி உள்ளதாய் கண்டறிந்துள்ளான். அது அவனது சிந்தனை வளர்ச்சி. சிட்டுக்குருவி அன்று தொட்டு இன்றுவரை கூடுகட்டி வாழ்கிறது. அது அதன் அறிவு. அதில் மாற்றம் இல்லை. ஆனால், குகைளில் வாழ்ந்த மனிதன் இன்று செவ்வாய் செல்லும்மளவு உயர்ந்து விட்டான். இது மனிதனின் பகுத்தறிவு. இவ்வாறு உச்சப்பயன் நோக்கி உயர்ந்து போகும் மனிதன் சில சமயங்களில் ஒடிந்து விழுந்து விடுகிறான்.


வாழ்க்கை ஒரு போர்க்களம். அந்தப் போர்க்களத்தில் கோழையும்



சண்டைசெய்தாக வேண்டும். தொடர்ந்து போராடினால் தான் மனிதன் தொடர்ந்து முடிசூட முடியும். நம்மில் பலர் சிறுதுன்பங்களைக் கண்டே துடித்து விடுகின்றனர். தவறு! அது தவறு!! ஒவ்வொரு உயிரின் வேட்கையும் இன்பம். அந்த இன்பத்தை துன்பத்துக்கெதிராக போராடுவதன் மூலம்தான் பெறமுடியும். சோதனையும் வேதனையும் வந்துவிடத்து அதுகண்டு அஞ்சக்கூடாது. "அச்ச மில்லை அச்சமில்லை அச்சமென்பஃ தில்லையே உச்சிமீது வானிடிந்து விழுகின்ற போதிலும் அச்சமில்லையே" என்று துணிந்து நிற்பவனுக்கு வாழ்க்கை வசதியாக அமைந்துவிடுகிறது. இடியைக் கேட்டிசூரியன் ஒடிஒளிந்துவிடுமானால் பூமிக்கு பகல் இல்லை. அதுபோல் வேதனையும் சோதனையும் கண்டு மனிதன் துவண்டு விடுவானானால் அவனது வானம் இருண்டுவிடும். எனவே தான் இந்த இருளை ஏற்காத வாழ்வே சிறப்பான வாழ்வாக அமையும். அந்த இருளுக்கெதிராக தீக்குச்சி கிழிப்பதே ஒவ்வொருவரதும் உழைப்பாக இருக்க வேண்டும். நம்பிக்கையையும் முயற்சியை யும் நெஞ்சில் நட்டுவைத்தால் இருள் அகன்றுவிடும் கண்ணில் நீர் வற்றிவிடும்.

அன்றாடம் மனிதன் வாழ்வின் வரப்பில் வழுக்கி துழுக்கி விழுகின்றான். ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் சமூக, பொருளாதார, அங்கீகாரப் பிரச்சினை களும் தோல்வி, ஏமாற்றம் முதலான-வற்றால் வாழ்வின் மீது கசப்பும், விரக்தியும், நம்பிக்கையீனமும் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. அந்த நம்பிக்கை யீனங்களால் "இனி இந்த உலகில் வாழமுடியாது" என்று கருதி தம்மைத்தாமே தற்கொலை செய்து கொள்ளும் அவலம் கண்ணில் ஈரம் கசிய செய்துவிடுகிறது.

வாழ்வைப்பற்றிய தீர்மானமோ அல்லது வாழ்வியல் பற்றிய ஒரு பிடிமானமோ, இல்லாமல், எங்கே போய்க் கொண்டிருக்கின்றோம் என்ற எண்ணமும் இல்லாமல் வாழ்ந்துகொண்டிருக்கும் மனிதக்குழுக்கள் இந்த மண்



மண்டலத்தில் மலிந்து கிடக்கின்றன. அடிமைநிலையும் நம்பிக்கையின்மையும் தாழ்வுமனப்பான்மையும் அவர்களின் எதிர்காலத்தை நிகழ்காலத்தில் இறந்த காலமாக்கிக் கொண்டிருக்கின்றன. வேதனையும் வெம்மையும் அவர்களின் முதுகெலும்பை முறித்துவிடுகின்றன. எதிர்காலத்தின் மீது நம்பிக்கையில்லாத வேதாந்தங்களும், வாழ்க்கையைவிட்டு வெளியே போனவர்களின் வறட்டுச் சித்தாந்தங்களும் அவர்களின் இருக் கின்ற வாழ்வையும் எரித்துவிடுகின்றன. எனவே இந்த வேதனைப்புண்ணுக்கு மருந்து நம்பிக்கை; இந்த விரக்தி கண்ணீர், கவலை இவற்றுக்குரிய நிவாரணம் நம்பிக்கையும் விடா முயற்சியுமே. ஒருவன் தன்னைப்பற்றிய தன்னம்பிக்கை கொண்டிருத்தல் அவசி யம். தன்னைப்பற்றிய முழு முகத்தையும் அறிந்துசெயற்பட வேண்டும். தன்னை நம்புதல் என்பது தன் வலிமையை நம்புதல். "பலத்தைப் பற்றிய நினைவே பலவீனத்தை ஒழிக்கும் வழி" என்று சுவாமி விவேகானந்தர் கூறியது போல தனது நம்பினால் தன் வலிபோகும்.

வாழ்க்கை என்பது தனியே போர்க்களமல்ல. இருந்தும் போராடாமல் இருப்பது குற்றம். போராடுவதுதான் தர்மம். போர்க்களத்தை உழுது பூச்செடிகளை நட்டுவைத்தால் வாழ்க்கை பூந்தோட்டமாகிவிடும். நமது வாழ்வை பூக்களமாக மாற்றுவதற்கு போர்க்களத்தில் காணும் சோதனை வேதனை என்னும் எதிரிகளை முயற்சி, நம்பிக்கை ஆகிய ஆயுதங்கள் கொண்டு போரிடும் போது வாழ்க்கை வசந்தமாகிவிடும். அந்தச் செயலை செய்துமுடிக்கும் முயற்சியும் மனோபலமும் இருந்துவிட்டால் காரியம் யாவும் வெற்றி! "மனதில் உறுதி வேண்டும்" என்று பாரதி பாடியதும் சும்மாவல்ல!.



"சுகமும் துக்கமும் சுழலும் சக்கரம்" என்பது போல மனிதவாழ்வில் சோதனை-வேதனை, கண்ணீர் - புன்னகை , இன்பம் - துன்பம், மரணம் - ரணம் இவையெல்லாம் மாறி மாறி சம்பவிக்கும் உண்மை. தனியே இன்பம், மகிழ்ச்சி, குதூகலம், புன்னகை என்று எந்த மனிதவாழ்விலும் சந்தித்துவிடுவதில்லை. எல்லா நிலைகளும் கலந்ததே மனிதவாழ்வு. எவனொருவன் துன்ப துயரங்களுக்கெதிராக கத்தி தீட்டு கிறானோ அவன் மீண்டும் இன்ப இனிமைகளை பெற்று விடுகிறான். அவனுடைய மனோபலம் மலையைக்கூட மணலாக்கிவிடுகிறது. இவற்றுக்கு மாறாக சோதனைகளையும் வேதனை வெம்மைகளையும் கண்டு விரக்தியும் வெறுப்புமடைந்து 'இனி என்ன வாழ்க்கை' என்று அலுத்துச் சோம்பி தன்னை மதுவுக்கும், புகைத்தலுக்கும் அடிமைப் படுத்தி அவற்றுக்கெதிராக 'முயற்சி'யை தொடங்காது இருப்பானானால் அவன், தன் வாழ்வின் மீது தானே சில கேள்விக்குறிகளை வரைந்து கொள்கி றான். மேடும் பள்ளமுமான மனித வாழ்வில் பள்ளத்தில் கூடுகட்டி மேட்டைத் தன்னால் அடைய முடியாது என்று சோம்பல் சொல்லிக் கொண்டிருப்பவனுக்கு அந்தப் பள்ளமே புதைகுழியாகிவிடுகிறது. ஆனால், அந்தப் பள்ளத்திலிருந்து சிகரத்துக்கு பறப்பதற்கு ஒருவன் காலநேரம்பாராது கடின உழைப்புச் செய்வானானால் அவன் நிச்சயம் உயர்ந்து கொள்வான். வரலாறும், தங்களைதொட்டு 'இவன் முயற்சியால் தன் செருப்புகளையே சிறகுளாக்கி சிகரம் சென்றவன்' என்று எழுதிக்கொள்ளும். எனவே விடாமுயற்சி வீண்தராது. இனி முடியாது என்று சொல்லி இடை நடுவில் நின்றிருந்தால், வாஸ்கொடகாமா நன்னம்பிக்கை முனையை கண்டிருக்கமாட்டார் என்று நாம் தெரிந்து வைத்துக்கொள்ள வேண்டும்.

மனிதவாழ்வில் ஒருவருடைய முயற்சிக்கு அனவது உயிர்கூட தடையாக இருக்கக்கூடாது. முயற்சியில் முன்னேறும் போது பாலைவனம் சோலைவனமாகி விடும். அவனது இலக்கின் கிழக்கில் இருள் கிழிந்து ஒரு சுடர்கொண்ட சூரியன் தெரியும். பாதங்களுக்குக் கீழே முட்கள் முளைத்துக் கிடக்க கிடக்க இரத்தம் துடைத்து முள்ளில் நடந்து சென்று முன்னேறியவர்களும், அக்கினி மழையில் தங்கள் குடை எரிந்துபோக தங்கள் நிழலின் நிழலிலேயே நீண்டதூரம் ஒதுங்கி வந்தவர்களும், தம் நிர்வாணத்தை ஒரு கையால் மறைத்துக்கொண்டு அடுத்தகையால் ஆடைநெய்து அணிந்துகொண்டும், சிலரை சில 'சூரியன்கள்' நிராகரித்துவிட வீதி விளக்கின் கீழ்ப்படிந்து மேல் உயர்ந்தும் நம்பிக்கையால் காப்பாற்றப் பட்டவர்களாக இருந்திருக்கின்றார்கள். முயற்சியும் நம்பிக்கையும் உயிரில் ஊறிவந்தால் தன்மேல் கிடந்த பாறைக-ளையும் முட்டிமுட்டி முளைத்துவிடும் ஒருவிதை!.

உலக இயக்கத்துக்கு காரணம் உழைப்பும் ஒன்றன் மீதுள்ள காதலும் தாம். அப்படி உழைப்பாலும் காதலாலும் உயர்ந்து மேலோங்கியவர்களை உலகம் தன் நெற்றியில் அழியாத மைதொட்டு



எழுதிவைத்திருக்கிறது. தன் முயற்சியாலும் இலட்சியத்தாலும் இருபத்து நான்கு வயதுக்குள் 'கீட்ஸ்' இமாலயக்கவிதைகளை எழுதிமுடித்தான் பாரதி முப்பத்தொன்பதில் சாதனை படைத்தான். 'மகாகவி பைரன்' கவிதைபடித்து முப்பதில் மரித்தான். இனிமேல் வெல்வதற்கு தேசமேயில்லை என்று முப்பத்திரண்டிற்குள் திகைத்து முடித்தான் அலெக்சாண்டர். புரட்சி எண்ணங்களால் பத்திற்குள் புதுமை படைத்தான் 'மாஜினி'. இவர்களெல்லாம் தமக்கேற்பட்ட துன்பதுரங்களுக்கெதிராக நம்பிக்கை கொண்டு போராடி சாத-னைபடைத்த முயற்சியாளர்கள் என்று உலகம் முதுகுதட்டிச் சொல்கிறது. ஆம்! மேற்கே சென்று விழுந்தாலும் முதுகு காட்ட மறுக்கும் சூரியர்கள் இவர்கள்.

சோகம், வேதனை போன்ற கொடிய நோய்களை கட்டுப்படுத்தாதுவிட்டால் அது புற்றுமாதிரி வளர்ந்து நம்மை முற்றுமுழுதுமாக அழித்துவிடுகிறது. நம்பிக்கை, முயற்சி என்னும் மாத்திரை களை உட்கொண்டவர்கள் நலமாக வாழ்கின்றனர். துன்பத்தை ஏற்றுக் கொண்டால் அது நரகத்தை ஏற்படுத்தும் நெஞ்சில் நம்பிக்கை இருந்துவிட்டால் உயர்வேன் என்ற உந்துதல் இருந்துவிட்டால் நரகத்தை சொர்க்க மாக்கிவிடமுடியும். 'என்னால் எதுவும் முடியும் எனக்கள் ஒரு மாபெரும் சக்தி குடிகொண்டிருக்கிறது' என்ற எண்ணங் கள் உள்ளத்தில் ஆழமாக வேர்விடும் பொழுது அது வலிமை பெறுகிறது. வலிமைபெற்ற எண்ணம் நம்மை செயல்தூண்டச் செய்கிறது. அந்த எண்ணம் செயலால் சாதனையாக மாறுகிறது. வெற்றியையும் பெற்றுத் தருகிறது. எனவே நம்பிக்கை தான் வாழ்வின் ஆணிவேர். "நம்பினோர் கெடுவதில்லை நான்குமறைத்தீர்ப்பு" என்ற பாரதியின் வாசகமும் பாராட்டுக்குரியதே. தொடரும்...


தமிழ் மக்களின் நெருங்கிய நண்பர்

ரவி நடராஜா

Accident & Traffic Ticket

(14 Years Insurance Claims Experience)



* வாகன விபத்துக்குள்ளாகியவரின் இழப்பீடு பற்றிய தகுந்த ஆலோசனைகள் வழங்கப்படும். * உரிய இழப்பீடுகள் * மற்றைய இழப்பீடுகள் * விபத்துக்குள்ளாகியவரின் சம்பள இழப்பீடுகள் மற்றும் வாகன விதி முறைகளை மீறிய குற்றங்கள்

(416) 245-6555

2095 Weston Road, Suite 203, Toronto, ON

(416) 755-2801

2390 Eglinton Ave., E. Suite 223, Scarborough. ON

ஓசோ தியானம்

வாரத்தில் ஒரு நாள் நமக்காக நம்மை அறிவதற்காக தியானம் செய்வோம். மனதைக் கடப்பது எப்படி? நான் யார்? அறிவது எப்படி? ஓசோவின் தியான முறைகள் வழிகாட்டி!

தொடர்புகளுக்கு : 905 305 0427





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு இனிய எதிர்காலத்திற்கான நம்பிக்கையான முதலீடு....

# புதியதோர் இல்லம்



இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்

HOMELIFE HIGHER STANDARDS

HOMELIFE/GTA Realty Inc.
1711 McCowan Rd., Suite 206, Toronto, ON M1S 3Y3

## சசி செல்வரட்ணம்
Real Estate Agent

Direct **416.725.1125**
Office **416.321.6969**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள்



## பயம்

எனக்கும், என் அன்புக்குரியவர்களிற்குமிடையே பயம் என்னும் விரோதி குறுக்கிட்டு பிரச்சனை ஏற்படுத்த சில சமயங்களில் நான் அநுமதித்து விடுவதைப் பற்றிய விழிப்புணர்வு எனக்கு ஏற்பட்டதும், நான் அன்பை அறிந்து கொள்வேன். எமது அன்பை நாம் உள்ளடக்கி வெளிப்படுத்தமாலிருப்பது எப்படி என்பது தெரியுமா? ஆம்! நாம் அடிக்கடி செய்கின்றபடியால் எங்கள் ஒவ்வொருவருக்கும் அதை எப்படிச் செய்வது என்பது நன்கு தெரியும். எமது மனநோக்கு, கோரிக்கை, செயற்பாடு முதலியவற்றைக் கொஞ்சங்கூட மாற்றா

**லலிதா புரூடி**

மல், பிடிவாதத்துடன் மற்றவர்களைத் தூரத் தள்ளி, உறவை முறித்துக் கொள்கிறோம். எங்கள் மேல் அக்கறையுள்ள பிரியமானவர்களின் மேல் ஏற்பட்ட கோபத்தால், எம்மைப் பணயக் கைதிகளாக்கி அவர்களை விரோதித்து விடுகிறோம். "எனக்கு ஏகப்பட்ட வேலை, ஒன்றுக்குமே நேரம் வருவதில்லை" என்று அங்கலாய்ப்புடன் நொந்திருக்கும் அவர்களின் மனதைத் தேற்ற ஒன்றுமே செய்யாது விடுகிறோம். ஏற்பட்டிருக்கும் பிணக்கின் காரணிகளை ஆராய்ந்து உளவளத்துணை போன்றவற்றின் உதவியுடன் அவற்றைத் தீர்க்க வழி வகுக்காது. எமது அன்பை உள்ளடக்கி உறவை முறித்து அவர்கள் மனதைப் புண்படுத்தி விடுகிறோம்.

மற்றவர் என்னென்ன விதங்களில் உன்மனதை ரணமாக்கினார் என்பதையும் உன் மனப்பாரத்தின் பழுவையும் வெளிப்படுத்தாது மறுக்கும்போது, நீ உன் அன்பை உள்ளடக்கி மறைத்துக் கொள்கிறாய். உங்கள் உறவைச் சீரமைக்கக்கூடிய முக்கிய தகவல்களை மற்றவரிடமிருந்து மறைக்கும் பொழுது, நீ உனது அன்பை வீணே உள்ளடக்கிக் கொள்கின்றாய். நீ காயப்பட்டு புண்பட்டு விடுவாய், ஏற்கப்படமாட்டாய் என்ற பயம், என்ன நடந்தாலும் எனக்குப் பரவா யில்லை என்ற பாவனை யாவும், நீ உனக்குள்ளிருக்கும் அன்பை மறைத்து உள்ளடக்கிக் கொள்வதைத் தான் காட்டுகின்றது. பிரச்சினையின் பங்காளியிடமிருந்து உனது உண்மையான உணர்வு அநுபவத்தை நீ மறைக்கும் பொழுது உனது அன்பை வெளிப் படுத்தாது மறைத்துக் கொள்கிறாய். அன்பின் வெளிப்பாடாக இல்லாதது எதுவும் உண்மையில் பயத்தின் வெளிப்பாடுதான். எந்தக் காரணத்திற்காகவும் எம் அன்பை வெளிக்காட்டாதிருப்பது, நாம் பயத்தினால் மூழ்கடிக்கப் பட்டிருப்பதன் அறிகுறிதான். நாம் காயப்பட்டுவிடுவோம் என்ற பயம். நாம் கொடுக்கும் அன்பு திரும்பக் கிடைக்காது என்ற பயம். இப்படி இன்னொருவரின் உறவிலிருந்து பின்வாங்குவதை நீ அவதானித்ததும், நான் ஏன் இப்படி என் அன்பை வெளிக்காட்டாமல் மறைத்து வைத்துக்கொண்டிருக்கின்றேன் என்ற கேள்வியை கட்டாயம் உன்னிடமே நீ கேட்டுக் கொள். அப்போது, மற்றொருவர் உனக்குச் இப்படிச் செய்வதை விரும்பாத உன்னை, உனது மறைமுகப் பயம்தான் இவ்வாறு உனது அன்பை வெளிக்காட்டாதிருக்கத் தூண்டுகிறது என்ற உண்மையை நீ உணர்ந்து கொள்வாய்.

உனது அன்பை வெளிக்காட்டாது அடக்கி வைத்திருக்கும் வழிமுறைகளையும், அதன் காரணத்தையும் இன்றுவரை நீ உணராது இருந்திருக்கலாம். இன்று உண்மையை அறிந்து கொள்! அன்பைப் பரிமாறிக் கொள். உனக்குப் பயம் இருக்கும் பொழுது, அதை அடையாளங்கண்டு, "ஆம் எனக்குப் பயம்", என்பதை ஒத்துக்கொள். பின்பு உன்னை நேசித்த வண்ணம் அந்தப் பயத்திற்கூடாகச் சென்று மறுபக்கம் வா. ஒருவிதப் பயமுமின்றி அன்பைக் கொடுக்கவும் ஏற்கவும் நான் இன்று தயார். எனக்குள் ஊறிப் பெருகும் அன்பை வெளிப்படுத்த, பரிமாறுவதில் நான் இனிமேல் கவனம் செலுத்துவேன். அன்னையர் தினம் 9.05.2004 அன்று கொண்டாடப்படுகின்றது. அன்புக்கு மறு பெயர் அம்மா அல்லவா? கண்ணுக்குப் புலப்படாத இறைஸ்வரூபத் தின் வடிவம் அன்னையாதலால்தான் அன்னையும் பிதாவும் முன்னறிதெய்வ மாக இன்றும் திகழ்கின்றனர். அவர்கள் நல்லவர்களில்லை என நான் நினைத்தா லும் அவர்களையும் நான் நேசிக்கலாம் என்பதை நான் உணர்ந்ததும் அன்பை முழுமையாக நான் உணர்ந்து கொள்கிறேன்.



உலகிலுள்ள யாவரும் நல்லவர்களாக, அன்புள்ளவர்களாக வாழ்ந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்? ஆனால் துரதிர்ஷ்ட வசமாய் மக்கள் அனைவரும் அப்படி இருப்பதில்லையே! ஆன்மீக யாத்திரையை ஆரம்பித்திருக்கும் உங்களுடன் நீங்கள் சந்திக்கும் ஒவ்வொருவரும் உங்களை வாழ்த்தி உங்களுடன் கூடச் சேர்ந்து வழிநடந்தால் எவ்வளவு அற்புதமாயிருக்கும்? ஆனால் அவர்கள் யாவரும் அப்படிச் செய்ய மாட்டார்கள். ஏனெனில் மிகவும் மனம் நொந்து வேதனைப்பட்டுக் கொண்டிருபவர்கள் பலர் இருக்கின்றார்கள். சில சமயங்களில் இவர்கள் தங்கள் வேதனையை, தெரிந்தோ தெரியாமலோ உங்கள் மீதும் சுமத்தக் கூடும்.

ஒரு காரணமுமின்றியே உங்களைப்பற்றி மற்றவர்கள் கூடாமற் கதைக்கக்கூடும். நீங்கள் செய்த நன்மைகளை மறந்து, அவர்கள் உங்களைத் தூஷித்து வன்முறையால் தாக்கவும் கூடும். தாம் அநுபவிக்கும் வேதனையைச் சமாளித்துத் தாங்க முடியாதவர்கள் தங்கள் பொய் பிரட்டுக்களினால் உங்கள் நம்பிக்கையைத் தகர்ப்பார்கள். சுயநலத்துடன் உங்கள் சொத்துக்களை, அபகரிப்பார்கள். தமது மனத்துயர் அதிகரிக்க அதிகரிக்க உங்களை அடித்து நொருக்கிக் காயப்படுத்தித் துன்புறுத்துவார்கள். பழிக்குப் பழியாக நிந்தனைக்கு நிந்தனை, அடிக்கு அடி, அவமதிப்புக்கு அவமதிப்பு எனச் செயற்படுவது தான் மனித ஸ்வபாவம். ஆனால் அவமதிப்புக்குப் பதில் அன்பு, துன்புறுத்தலுக்கு அன்பு, மற்றவர்களின் எந்தக்கெட்ட செயலுக்கும் பதிலாக அன்பைக் காட்டுவதையே ஆன்மீக நியதி போதிக்கின்றது. உங்களை வெறுப்பவர்களை நீங்களும் வெறுப்பது, உங்களிடமிருந்து களவெடுத்தவரிடமிருந்து நீங்களும் எடுத்துக்கொள்வது, துன்புறுத்துபவர்களை துன்புறுத்துவது தான் வாழ்க்கையின் வழக்கம். ஆனால் எவ்வளவுக்கெவ்வளவு அன்பில்லாது கொடூரமாக ஒருவர் செயற்படுகிறரோ அவ்வளவுக்கவ்வளவு அவருக்கு அன்பு அரவணைப்பு தேவை. அதனால் தான் அவர் இப்படிப் பிழையாக நடக்கிறார் என்பதை உணர்ந்து அதை அடையாளங்கண்டு அவருக்கு ஈந்து அவரைச் சொஸ்தப்படுத்திக் குணமாக்குவது ஆன்மீக நியதி.

மேலதிக தகவல்களிற்கு அழையுங்கள் - 905-624-9617


CHILDREN'S EDUCATION FUNDS INC.
A VERY DIFFERENT RESP

NOW EARN AIR MILES Travel and More
REWARDS MILES WITH CET

அரச அங்கிகாரம் பெற்ற புலமைப் பரிசில் சேமிப்பு திட்டம் (R.E.S.P)
நீங்களே தெரிவு செய்யுங்கள்

SCHOLARSHIP PAYOUTS FOR - 2003
(புலமைப் பரிசில் கொடுப்பனவு)
TOTAL SCHOLARSHIP FOR 4 YEARS PROGRAM

அரசின் 20% இலவசம்

THE CHILDREN'S EDUCATION TRUST
PAID $5100.00 PER UNIT
HERITAGE SCHOLARSHIP TRUST
PAID $2840 PER UNIT (Heritage units are smaller ,therefore need to multiply by 2 for accurate comparison $1420x2)
CANADIAN SCHOLARSHIP TRUST
PAID $2980.00 PER UNIT
U.S.C FAMILY EDUCATION SAVINGS PLAN
PAID $2830.02 PER UNIT (U.S.C units are smaller, therefore need to multiply by 2 for accurate comparison $1415.01x2)



மேலதிக விளக்கத்திற்கு Seelan இவரை அழையுங்கள்
416 451 0271



சீலன்

"நாம் நமது குழந்தைகளின் உயர் கல்விக்கு உதவி செய்யத் தவறிவிட்டால் அதனால் பாதிக்கப்படுபவர்கள் நமது பேரக்குழந்தைகளே!"





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடு வாங்க, விற்க... வீடு வாங்க, விற்க... வீடு வாங்க, விற்க... வீடு வாங்க, விற்க... வீடு வாங்க, விற்க... வீடு வாங்க, விற்க... வீடு வாங்க



# Raja M. Mahendran, P.Eng

Broker / Owner

Direct:(416) **315-9397**



ராஜா மகேந்திரன்

**HOMELIFE/GTA Realty Inc.,** Real Estate Broker
1711 McCowan Rd.,Suite 206, Scarborough, ON. M1S 3Y3.
TEL: (416) 321-6969 FAX: (416) 321-6963
email: raja@mahendran.ca

வீடு வாங்க, விற்க... வீடு வாங்க, விற்க... வீடு வாங்க, விற்க... வீடு வாங்க, விற்க... வீடு வாங்க, விற்க... வீடு வாங்க, விற்க... வீடு வாங்க

## Moringside/Ellesmere



Stacked Town home
2+1Bedrooms
2 Washrooms
1 Kitchen

*Asking only $ 134,900*

## WARDEN/FINCH



CONDO APARTMENT
2+1 Bedrooms 2 Washrooms
Close To Mall, Library, TTC,Etc

## LAWRENCE/MOSSBANK



Detached Sidesplit
Huge home 4+1 bedrooms
4 Washrooms 2 Kitchens
Finished BSMT With 2 Large Bedrooms

## COFFEE SHOP IN NEWMARKET

*$10,000 Weekly sales,*
*Rent 5800/mthy*
*Good income, Good Potential*

**Asking only $139,000**

## MARKHAM / EGLINTON

Spacious
2 Bedrooms Condo
2 Washrooms
Excellent Location
Great View



**Asking Only $144,900**


## NEILSON / McLEVIN



*Asking $244,900*

Detached Back split
4+1 Bedrooms
3 Washrooms
2 Kitchen

## MARKHAM/KINGSTON



*Asking $289,900*

Detached Back split
3+2 Bedrooms
3 Washrooms
2 Kitchen
Separate entrance

## *IN MARKHAM*



*Asking $474,900*

New Detached Home
4 + 2 Bedrooms
5 Washrooms
Finished Basement
Separate Entrance

BRAND NEW CONDOS FOR SALE BY
**WELL KNOWN BUILDERS**
1BED ROOM & 1+DEN/2BEDROOMS & 2+DEN
3BEDROOMS & 3+DEN

ONLY $139,000

AFFORDABLE PRICE
PRICE STARTING FROM
FIRST TIME BUYERS ONLY 5% DOWN

## ALLEN/SHEPPARD



*Asking $194,900*

2 Bedrooms 2 Washrooms
1 Kitchen Corner Unit
One Block To Subway

## PHARMACY/LAWRENCE



DETACHED BUNGALOW
3 +2 Bedrooms
2 Washrooms
2 kitchens
Separate Entrance
**$$$ Lots of Upgrades**

*Asking $359,900*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓராம் மனிதன்!

(தாமரைத்தீவான்)

*ஓராம் மனிதனடா, உலகின் சுடரோனே!*
*வாராதிருந்து முதல் வந்தேன் - தமிழனடா!*
*என்னில் இருந்தலவோ எல்லோரும் வந்தார்கள்?*
*என்மொழியே எம்மொழியும், எல்லாம் அறிவாய் நீ!*
*கடல் வந்தழித்ததடா! 'கண்ட'மோ போனதடா!*
*வடமண் உயர்ந்ததடா! வாரியோ தெற்கிலடா!*
*தப்பும் இலங்கையிலே தமிழோடிருந்தனடா!*
*உப்புக்கடல் என்றால் உப்பாதிருந்திடுமோ?*

*வந்தார்க்குப் பாய்விரித்தேன்! வாழத்துணை புரிந்தேன்!*
*பிந்தியவன் முந்தியதால் பெருமடையன் ஆனேனே!*
*இரண்டாம் மனிதன் என இருந்தேன் சிலகாலம்!*
*வரண்டதடா வாழ்வு! வளங்கள் பறந்ததடா!*
*நல்லோனாய் நானிருந்தேன், நலமேதும் இல்லையடா!*
*வல்லோனாய் வாழாமல் வதைபட்டழிந்தேனே!*
*தந்தையில்லை, தாயுமில்லை! தமையன், தமக்கையில்லை!*
*பிந்தினோன் தம்பியில்லை! பேசாதிருவர் உள்ளோம்!*
*தாமரை வில்லுமில்லை! தாய்க்கண்டற்காடுமில்லை!*
*ஆமிங்கெதுவுமில்லை! அலைச்சல் மிகுதியுண்டு!*
*இலிங்கநகருமில்லை! எரியுண்ட வீடுமில்லை!*
*வலிவும், வனப்புமில்லை! வயதுமோநின்றதில்லை!*

*பிழைக்கும் வழியறியேன்! பெருந்தாளைக்கண்டறியேன்!*
*உழைக்கும் திறனறியேன்! உயர்பஞ்சம் தீர்த்தறியேன்!*
*பேயின் வரவறியேன்! பெருமூடநோக்கறியேன்!*
*நோயின் தொடுப்பறிவேன்! நுவலும் மருந்தறிவேன்!*
*செவியாக நானிருந்தேன்! சேர்கொம்பு வந்ததுவே!*
*செவியை மறைத்ததுவே, சிறிதாகவந்த கொம்பு!*
*மூன்றாம் மனிதன் என மொழியும் நிலையிலுளேன்!*
*ஊன்றக் கொடுத்ததடி உடலைக்கிழிக்கிறதே!*
*குளத்தைக்கலக்கினனே கொள்ளுதே செம்பருந்து!*
*கிழக்குவெளுக்குமுதல் கிளம்புறதே புள்ளினங்கள்!*

*ஆட்டை அறுக்குமுதல் அதற்குவிலைபேசுவதே?*
*வேட்டை புரிந்துவிட்டு விரதத்தைக்காட்டுவதோ?*
*என்ன உலகமடா? ஏனிந்தக்கோலமடா?*
*உண்மைத்தெரியாமல் ஒன்றும் நிகழ்ந்ததில்லை!*
*மக்கட்சமுதாயம் மாக்களாய் மாறியதேன்?*
*எக்காலம் ஒற்றுமையாய் எல்லோரும் வாழுவரோ?*
*இன்னும் இருப்பேனோ? எத்தனைநாள் வாழ்வேனோ?*
*பின்னைச்சமுதாயப் பிள்ளைகளென் செய்வாரோ?*
*வந்தேதும் செய்தேனோ? வாழ்ந்தேதான் போவேனோ?*
*நொந்ததோர் உள்ளமடா, நுவன்றதிலைகேட்பாயோ?*

# எண்ணங்கள்............

இது ஒன்று இருப்பதால் தானோ
இதில் ஓடும் நினைவுக்குள் மீளாது
மாளாது கண்ட மாந்தரும் மரணித்தாலும்
தரணியலவர்களின் புகழ் இன்றும் பேசப்படுகின்றதோ?

ஏணிப்படிகளாய் ஏறுமிது எண்ணிக்கையின்றிவை
கண்ணுக்குள் அவை நிழற்படங்களாய்
விண்ணில் அவை உதித்திடவோ இது போடும் திட்டம்
கட்டம் கட்டமாய் படுத்தும் பாடு இது
வட்டமிட்டுச் சுழரும் அது தட்டித் தட்டி ஏதோ.


ஏனோ இது ஏழைக்குடிசைக்குள் புகுந்துவிட்டால்
கூழுக்கும், மீசைக்கும் ஆசைபோல்
அடங்காது ஆட்டமாய் ஆட்டிவைக்கும்
போட்டாலும் தீராத திட்டமிது
கிட்டவந்து கொட்டாத செல்வம் கையில்லாத போது
எட்டாப்பழம் தின்ற கதைபோல்
இது வந்து உதிப்பதேனோ?

பணக்காரன் இவனுக்குள் புகுந்துவிட்டால்
கணக்கின்றி ஓடும் இது அணை உடைத்த வெள்ளம்போல்
துணை கொடுக்கும் இவர்களிற்கோ செல்வச் செழிப்பங்கு
கழிப்பாய் இது போடும் திட்டத்தில் போட்டாய போட்டி அதிலும்
ஏட்டிக்கு யார் வருவார் எடை போட்டுத்தான் பார்க்க
தூங்க மறந்த வேளை போக பாதி இரவு விழிப்போடு
பகற்தூக்கம் கைகொடுக்க இது போடும் தாலாட்டு.

மட்டமோ புத்தியிலே மாறுபட்ட எண்ணமாய்
கூறுபோட்டும் பார்ப்பாரோ கூலி வேலையும் பாராது
அரியணை தேடுமோர் அளவு கடந்த மோகமாய்
இழவு எதுவும் புரியாத இவர்களிற்குள் இது உதிக்குமெண்ணமோ
பேராசை ஆனகதையாய் நிராசை போலாகிடுமோ?

நிறைவுகள் இதில் கண்டிடவோ நீங்காது இது நினைவினிலே
குறைவுகள் தான் வரினும் குடிகொள்ளும் ஓர் மறுபக்கம்
படிவுகள் உண்டு இங்கு பலவிதமாய் அடிவைக்க
விலக்குண்டு இங்கதற்கும் விலக்குவதை விரட்டிவிட்டால்
துலங்கிடுமோர் தென்றல் புது வாசம் தேடிவர
விளங்கிடுவீர் புதுஎண்ணம் பூத்துவர.

- ஆக்கம்: சுதா

**TUTION**

உங்கள் பிள்ளைகளின் எதிர்கால நல்வாழ்விற்கு இன்றே

*Math* *Calculus*
*Chemistry* *Algebra/*
*Physics* *Geometry*
*Accounting* *Finite*

**Teachers:**
**S. Sivakumar**, M.Sc (Canada), M.C.S.E., A+
**S. Sivakumaran**, B.Sc (Hon), Dip-in Ed., MA (UK)
**S. Vinotha**, C.G.A

**அத்திவாரமிடுங்கள்!!**

**From Grade 5 to University**

**College:** Calculus, Linear Algebra & Geometry, Accounting
University: Calculus I & II, Fundamental Mathematics


தொடர்புகளிற்கு: **Kumar -(416)282-1421 / (416) 335-5595 /**
**(416) 835-5806 Kennedy & Ellesmere, Morningside & Ellesmere**

**TUITION**



* Chemistry > Gr.13
> Gr. 11 Gr. 13
* Physics
* Finite > Gr. 13
* Algebra & Calculus

* Maths New Curriculum for Grade 12 Geometry & Discrete Mathemetices, Universict preparation இவற்றுடன் **OAC** பாடங்கள். கனேடிய கல்வி அனுபவம் பெற்றவரால் நடத்தப்படுகிறது. **NEILSON / M^C^LEVIN**
PL CALL: Mr. & Mrs. Sharma,
(416) **724-8336**



**TUITION**

அனுபவம் வாய்ந்த தரமான முதுகலை (M.A.) பட்டதாரி ஆசிரியையினால் KINDERGARDEN இலிருந்து Grade 6 வரையிலான பிள்ளைகளுக்கு பாடங்கள் சொல்லிக் கொடுக்கப்படும்.

**PL CALL: 264-9471**

**ENGLISH & MATH TUITION**

UNDERTAKES FOR GRADES 2 TO OAC (GR. 12)
BY
(EXPERIENCED LECTURES WITH WIDE EXPERIENCE)
IN
ENGLISH (Grammatical/ Spoken/ Written)
AND
Maths from Gr.2 to OAC & Gr. 12.
Groups of 4 and indivitual classes available for all grades.
Special groups of 4 and individual classes available in
(1) Geometry & Dis Mathematics (2) Advanced Functions & introductory Calculus
(Separate group classes available for girls only)
CONTACT: **416 - 431- 6774 (Markham & Ellesmere)**



## நூல் தொகுப்பு - அறிவித்தல்

*அனைத்துத் தமிழ் மக்களுக்கும் ஊடகவியலாளருக்கும் அன்பான வேண்டுகோள்!*

*தமிழீழ மண்ணில் 'இந்திய அமைதிப் படையின்' (1987-1990) காலப்பகுதி தொடர்பான இலக்கியப் பதிவுகள் கட்டுரைகள் ஆகியவற்றைத் தொகுத்து வெளியிடவிருக்கிறோம். இதுவரை வெளியிடப்பட்டவை மற்றும் வெளிவராது கையெழுத்துப்படிகளாக உள்ளவைகள் யாவையும் அனுப்பி, தமிழர் வரலாற்றின் முக்கிய காலகட்டத்தினைப் பதிவு செய்யும் செயற்பாட்டில் உதவுமாறு கேட்டுக்கொள்கின்றோம். இத்தொகுப்பு ஆவணி 2004 முடிவில் நிறைவு பெற இருப்பதால் அதற்கு இருகிழமைகள் முன்பாகக் கிடைக்குமாறு கீழ்க்காணும் முகவரிக்கோ அல்லது மின்னஞ்சலுக்கோ அனுப்பி வைக்கவும்.*

முகவரி: OLKAAR, 73 Flora Dr., Toronto, ON, M1P 1A5, Canada
மின்னஞ்சல் : tamilvoice@hotmail.com
- ஒல்கார் அமைப்பினர்

## மூன்றாவது சர்வதேச தமிழ்க் குறுந்திரைப்பட விழா



*மூன்றாவது சர்வதேச தமிழ்க் குறுந்திரைப்பட விழா வருகின்ற June மாதம் Toronto மாநகரில் நடைபெறவுள்ளது. இவ் விழாவுக்கு குறுந்திரைப்படங்கள் உலகெங்கும் இருந்து எதிர்பார்க்கப்படுகின்றன.*

* *பிரதிகள் அனுப்பப்பட வேண்டிய இறுதித் திகதி மே மாதம் 16ஆம் நாள்.*
* *படைப்புக்கள் 30 நிமிடங்களுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும்.*
* *தேர்வுக்குழுவின் முடிவே இறுதியானதாகும்.*
* *பிரதிகள் அனுப்பவேண்டிய முகவரி: 4 Castlemore Avenue Markham, Ontario, L6C 2B3 Canada*
* *தொடர்ப்புகளுக்கு 416-431-5095, 905-887-7457, email: raathan@pathcom.com*
* *சிறந்த நெறியாள்கை, சிறந்த திரைப்படம், சிறந்த எடிட்டிங், சிறந்த ஒளிப்பதிவு, சிறந்த திரைக்கதை ஆகிய பிரிவுகளில் விருதுகள் வழங்கப்படும்.*

*Art Film Society of Toronto*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# New Kalyani Catering & Take out

## OPENING SOON



திருத்த வேலை காரணமாக
தற்காலிகமாக பூட்டப்பட்டிருக்கும்
'நியூ கல்யாணி' மிக விரைவில்
திறக்கப்பட இருக்கின்றது.

**292 Markham Road, Scarborough, ON**

**Tel: 416-509-2454**






# "நம்பிக்கை நாணயம் நந்தா"

வீடு வாங்க விற்க
மற்றும் இலவச ஆலோசனை பெற்றுக்கொள்வதற்கும்

முதல் முறையாக வீடு வேண்டுபவர்களுக்கு,
அவர்களுக்கு உள்ள சலுகைகளை அறிந்து கொள்வதற்கும்

உங்கள் வீட்டின் தற்போதைய விலையை அறிந்து கொள்வதற்கும்

குறைந்த வட்டி வீதத்தில் Mortgage செய்து கொள்வதற்கும்

COLDWELL BANKER
Coldwell Banker Coburn Realty

அழையுங்கள்
நந்தா



**Nantha Aiyadurai**, B.Eng
Sales Representative
**Office : 613-823-7555**
**Cell : 613-866 9931**
Toll Free : 1 800 472 6512
E-mail: nantha-aiyadurai@coldwellbanker.ca






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# BASEMENT FOR RENT

MARKHAM RD. & HIGHGLEN
2 BEDROOM BRAND NEW BSMT FOR RENT. AVAIL. IMMEDIATELY. ALL THE FACILITIES TTC, SHOPPING PLAZA, SCHOOLS. CABLE, PARKING FREE. ALSO HALF MONTH RENT FREE.
தொடர்புகளுக்கு: 905-472-2498 / 416-302-3543 AFTER 6:00 PM, WEEKENDS.

*****************************************

MCCOWAN & ELLESMERE
1 அறை கொண்ட BSMT வாடகைக்கு உண்டு. SEP. ENTRANCE, KITCHEN, LIVINGROOM, WASHER, DRYER, PARKING, CABLE. ALL INCLUDED. WALKING DISTANCE TO THE RT & SCARBOROUGH TOWN CENTRE, CLOSE TO HWY 401 - 24 HR BUS SERVICE, SCHOOLS. NON SMOKERS PREFERRED. RENT NEGOTIABLE. தொடர்புகளுக்கு: 416-431-5172 AFTER 6:00PM

*****************************************

MIDLAND / BRIMLEY / EGLINTON
புதிதாக அமைக்கப்பட்ட இரண்டு அறைகள் கொண்ட BSMT வாடகைக்கு உண்டு. அத்துடன் மூன்று அறைகள் கொண்ட வீட்டில் ஒரு அறை வாடகைக்கு உண்டு. பெண்கள் விரும்பத்தக்கது. தொடர்புகளுக்கு:
416-261-2107 / 416-817-5977

*****************************************

ORTONPARK & LAWRENCE இற்கு அருகாமையில் 2 BEDROOM BSMT உடனடியாக வாடகைக்கு உண்டு. FULL WASHROOM, LIVING ROOM, KITCHEN, WASHER, DRYER. சீமை உணவுக்கடை, பஸ், பாடசாலை மிகவும் அருகில் உண்டு.
தொடர்புகளுக்கு: 416-431-3959
416-579-7121 ( cell)

*****************************************

BRIMLEY & LAWRENCE
2 அறைகள் கொண்ட BSMT வாடகைக்கு உண்டு. தனித்தனியாகவும் வாடகைக்கு கொடுக்கப்படும். SEP. ENTRANCE. PARKING, LAUNDRY. AVAIL. ANYTIME. CLOSE TO TTC, SCHOOL, STORES.
தொடர்புகளுக்கு: 416-264-2442

